Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 21 (09.08.2004) திங்கட்கிழமை இதழ்:311

## சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க

# நோர்வே ஏற்பாட்டாளர்கள் விரைவில் இலங்கை வருவர்

(கொழும்பு)

***அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு – நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் விரைவில் இலங்கை வரவுள்ளதாக – கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.***

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவித்துவந்த நிலையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகியதும், சமாதான முயற்சிகளில் ஈடுபட உதவுமாறு நோர்வே அரசாங்கத்துக்கு அவசர தகவல் அனுப்பினார்.

விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சு நடத்தத் தயார் என்றும், இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் ஜனாதிபதி சந்திரிகா நோர்வே அரசை இராஜதந்திர ரீதியில் கோரியிருந்தார்.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஒஸ்லோவுக்கு கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண சிறைச்சாலையில் 168 கைதிகள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரியின் மாற்றத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்தும், சிறைச்சாலைச் செயற்பாடுகள் தொடர்பாக கண்டித்தும் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படிருக்கும் கைதிகள் சிலர் பாரபட்சம் காட்டப்பட்டு விடுதலை செய்யப்படுவதாகத் தெரிவித்தும், யாழ். சிறைச்சாலை பொறுப்பதிகாரி மாற்றம் பெற்று செல்வதைக் கண்டித்துமே 168 கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இவர்களை இன்று யாழ் மனித உரிமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச நியமனத்தில் புறக்கணிப்பு

## டிப்ளோமா பட்டதாரிகள் மறியற்போர்; இன்று செயலகம் முன் நடைபெறும்!

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டம் பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டமையைக் கண்டித்தும், தங்களையும் வேலைவாய்ப்பு நியமனத்தில் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தியும், இன்று யாழ்.செயலகம் முன் நடைபெறவுள்ள மறியல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் விரிவுரைகளை பகிஷ்கரித்து மறியற் போராட்டத்தில் கலந்துகொள்ளப்போவதாக தெரிவித்துள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உலகத் தொழில் நுட்பங்களோடு

## போட்டி போடுகின்ற அளவுக்கு வன்னி ரெக் விளங்குகிறது!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் பாராட்டு

(கிளிநொச்சி)

தமிமீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சிந்தையின் பயனாக வன்னியில் உருவாகிய தொழில் நுட்ப நிறுவனம் தனது முதலாவது தொகுதி மாணவர்களை வெளியேற்றுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற வன்னி தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்களின் பட்டமளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறுப்புரை நிகழ்த்தும் போதே - அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்:

## யாழ். பாடசாலைகளில் வேம்படி முன்னிலையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று மாலை பரீட்சைத் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றில் எமக்குக் கிடைத்த பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.நகரப் பகுதிப் பாடசாலைகளில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 12 மாணவிகள் 3 பாடங்களிலும் ஏ சித்தி பெற்று, முன்னணியில் விளங்குகிறது.

இதேவேளை யாழ். இந்துக்கல்லூரியில் 10 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்கள்.

அந்தப் பெறுபேறுகளின் விபரம் வருமாறு.

**வேம்படி மகளிர்கல்லூரி**

**கணிதம**

சுகிர்தினி விநாயகவசீகரன் 3ஏ, அனுசா செல்வராசா 3ஏ, ஜென்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிதியுதவிக்காக புலிகளுடன் பேசுவதற்கு ஜே.வி.பி. எதிர்ப்பு!

(கொழும்பு)

நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கும் நோக்குடனோ அல்லது கோடிக்கணக்கான டொலர் நிதியுதவிகளை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் நோக்குடனோ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் ஆரம்பிக்கக் கூடாது என்று ஜே.வி.பி வலியுறுத்துகிறது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜே.வி.பி வெளியிட்டிருக்கும் அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயந்த தனபால இன்று யாழ்ப்பாணம் வருகிறார்!

(கொழும்பு)

அரசாங்க சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜெயந்த தனபால இன்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்.குடாநாட்டு நிலைமையை நேரில மதிப்பீடு செய்வதற்காக வரும் ஜெயந்த தனபால - அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், அரசாங்கத் தரப்பு உள்ளூர் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ள தனபால, விடுதலைப் புலிகளின் தரப்பு பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவாரா என்பதை அரசாங்க சமாதா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்கள் இணைந்து பொதுவான அரசியற்கூட்டணி!

### கருணாவையும் இணைக்கத் திட்டம்

(கொழும்பு)

அரசியல் கட்சிகளாக இயங்கும் மூன்று தமிழ்க்குழுக்களுடன் கருணாவையும் இணைத்து வடக்கு-கிழக்கு ஜனநாயக முன்னணி என்ற பெயரிலான அரசியல் கட்சியொன்றையும் அதற்கான ஆயுதக்குழுவொன்றையும் அமைப்பதற்கான முயற்சிகள் திரைமறைவில் இடம் பெற்றுவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, சித்தார்த்தன் தலைமையிலான புளொட், வரதராஜப் பெருமாள் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளுடன் கருணாவை இணைத்தே இந்த அரசியல் கட்சி ஆரம்பிக்கப் படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை புளொட் அமைப்புக்கு வழங்குவதற்கும் சர்வதேச தொடர்பாளராக வரதராஜப்பெருமாளை நியமிப்பதற்கும் இந்தக் கட்சியின் ஆயுதக்குழுவுக்கு பொறுப்பாக கருணாவும் நியமிக்கப்படவுள்ளதாக அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# PATRICIAN INSTITUTES,
## பற்றிஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் 2 ஆவது புதிய பிரிவுகள் ஆரம்பம்

**ஆரம்பம் : 16.08.2004**

I)
- A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING — DURATION 1 YEAR
- B. DIPLOMA IN MICRO SOFT OFFICE — DURATION 6 MONTHS
- C. DIPLOMA IN TYPE SETTING — DURATION 3 MONTHS
- D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING — DURATION 4 MONTHS
- E. DIPLOMA IN DESK - TOP PUBLISHING — DURATION 6 MONTHS
- F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. — DURATION 3 MONTHS
- G. INTERNET & E-MAIL — DURATION 1 MONTH
- H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY — DURATION 5MONTHS

II) CERTIFICATE COURSES :

| | | |
|---|---|---|
| i) M.S.WORD - 2000 | vi) PASCAL | xi) D BASE FOR WINDOWS |
| ii) M.S.EXCEL - 2000 | vii) d BASE 111+ | xii) PRINT SHOP DELUX |
| iii) M.S.ACCESS - 2000 | viii) PAGE MAKER | xiii) ADOBE PHOTO SHOP |
| iv) M.S.POWER POINT | ix) WINDOWS 95 | xiv) QUICK BOOK |
| v) VISUAL BASIC VER. 6.5 | x) COREL DRAW | EACH 3 MONTHS |

- III) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (காலம் 6 மாதங்கள்)
  (Pitman London Exam Paper மாதிரி வழங்கப்படும்)
- IV) சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) (காலம் 6 மாதங்கள்)
- V) மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & Diesel வாகனங்கள்) (காலம் 6 மாதங்கள்)
- VI) ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) (காலம் 6 மாதங்கள்)
- VII) வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (காலம் 8 மாதங்கள்)
- VIII) கடைச்சல் இயந்திரத் தொழிற்பயிற்சி
  (ON THE JOB TRAINING வழங்கப்படும்) (காலம் 3 மாதங்கள்)
- IX) மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING)
  (ON THE JOB TRAINING வழங்கப்படும்) (காலம் 6 மாதங்கள்)
- IX) மரவேலை (With Use of Machinery)
  (ON THE JOB TRAINING வழங்கப்படும்) (காலம் 6 மாதங்கள்)
- X) குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் (காலம் 6 மாதங்கள்)

எமது நிறுவனத்தில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லா விதப் பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் சகலவிதமான இரும்பு சார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவுமூலம் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்துகொடுக்கப்படும்

Note :
1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டிப் பங்குக்குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வாகன தகுதிச் சான்றிதழ் - 2004**

௨00௪ ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனைச் சகல வாகன உரிமையாளருக்கும் அறியத்தருகின்றோம்.

(சனி, ஞாயிறு வகுப்புகள் இடம்பெறும்)
மேலதிக விபரங்களுக்கு:
**REGISTRAR,**
**PATRICIAN INSTITUTES,**
**59, ST. PATRICK'S ROAD,**
**JAFFNA**



கணினி மையத்தில் இன்ரநெற் இணைப்பு



இன்ரநெற் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் கணினி மையத்தில் விநியோகிக்கப்படுவதால் விண்ணப்பப்படிவங்களை பெற்று பூரணப்படுத்தி வாய்ப்புக்களுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

கணினி மையம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-2803)


# ஆமணக்கம் விதையை உட்கொண்ட ஆறு சிறுவர்கள் வைத்தியசாலையில்

ஆமணக்கம் வித்து உட்கொண்ட ஆறு சிறுவர்கள் மயக்கமடைந்த நிலையில், மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கற்கோவளம் புனித நகர் நலன் புரி நிலையத்தைச் சேர்ந்த சதீஸ் குமார் சரிதா (வயது 4), இவரது சகோதரன் சதீஸ்குமார் சொலக்ஸ் சன் (வயது 8), கந்தசாமி சிந்துஜா (வயது 5), இவரது சகோதரி கந்த சாமி லோகவாணி (வயது 8), ஜெய வாசன் (வயது 6), கு.நம்சினி (வயது 8) ஆகிய ஆறு சிறுவர்களுமே மயக்கமடைந்தனர்.

விடுமுறை நாளான நேற்று இப் பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள் சேர்ந்து குடியிருப்புக்கு அருகிலுள்ள பற்றைக் காணியிலிருந்து எடுத்து வரப்பட்ட ஆமணக்கம் விதை களைஆறுபேரும் உட்கொண்டனர்.

இதனால், மயக்கமடைந்த ஆறு சிறுவர்களும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (15)

# புலமைப் பரீட்சை மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை நாளை நடைபெறும்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சகல பாடசாலைகளிலும் ஆரம்பமாகும்.

இன்று நடைபெறும் அதிபர்கள் கூட்டத்தில், வினாத்தாள் பொதியையும், விடைத்தாள் பொதியையும் புள்ளிப்பகுப்பாய்வுப் படிவங்களையும் எடுத்துச் சென்று நிறைவுப் பரீட்சையை நிறைவு செய்யும் படி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

நிறைவுப் பரீட்சையின் புள்ளிப் பகுப்பாய்வை விரைவாக வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு அனுப்பிவைக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலையில் இசை நாடகம்

வெறுவெளி அரங்கக் குழுவினர் தயாரித்த காலனை வென்ற காரிகை இசைநாடகம், நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு யாழ்.பல் கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

## வீதிகள் புனரமைப்பு

ஸ்ரீ வல்லிபுர ஆள்வார் தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தின் அருகாமையிலுள்ள வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக மந்திகை மருத்துவமனையிலிருந்து ஆலயத்துக்கு செல்லும் நீளமான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.


**BARATHY**
சித்தங்கேணி
இப்பிரதேசத்தில் அதி உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி
**A/L DAY CLASS**
11-08-2004
**புதிய பிரிவு ஆரம்பமாகின்றது**

| | |
|---|---|
| பொருளியல் | - உதயன் |
| கணக்கீடு | - முகுந்தன். |
| வணிகக்கல்வி | - பசில் |
| தமிழ் | - பாலா |
| அளவையியல் | - R.P.சர்மா |
| இந்து நாகரிகம் | - சுரேஸ் |
| புவியியல் | - குமரன் |
| இந்து சமயம் | - தரன் |
| நாடக அரங்கியல் | - சுதன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன் |
| அரசியல் | - ரஜீவன் |
| வரலாறு | - பத்மன் |

அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
(913)



**நிறஞ்சனாஸ்** சங்கானை



அர்ஜுன், ரோஜா நடித்த
**ஆயுத பூஜை**
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
past Perfect
(சி-2723)



**நாகம்ஸ்** சுன்னாகம்



இன்று மட்டும்
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
ரஜினிகாந், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
**பாட்ஷா**
நாளை முதல்
**மானஸ்தன்**
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)



**ராஜா** யாழ்ப்பாணம்.



சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த
**குத்து**
சில தினங்கள் மட்டும்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)



**மாருதியற் கல்லூரி**

நாவலர் றோட் யாழ்ப்பாணம் — K.K.S றோட் இணுவில்

இரு இடங்களிலும் அதிஉயர்ந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி
புதியபிரிவுகள் ஆரம்பம் **A/L DAY CLASS**
கலை, வர்த்தகம்

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P சர்மா | R.P சர்மா<br>ஜெயசுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடகமும் அரங்கியலும் | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | ரஜீவன் | ரஜீவன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |

ஆரம்பம் - 11 - 08 - 2004 புதன்
இணுவில் - 8.00 யாழ்நகரில் - 8.00 (பு.நே)
அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்
(902)

# இரண்டரை ஆண்டு காலத்தில் 59 புலனாய்வாளர்கள் கொலை

## இராணுவத் தலைமையகம் முறைப்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட தினம் முதல், இதுவரையில் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மற்றும் மாற்றுக் குழுக்களின் தகவல் வழங்கும் உறுப்பினர்கள் உள்ளிட்ட 59பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தலைமையகம் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ள முறைப்பாட்டிலேயே, இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் 96 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், இராணுவத் தலைமையகம் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணமென இராணுவத் தலையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடைய 30 அதிகாரிகள் மட்டக்களப்பிலும், திருகோணமலையில் ஏழு அதிகாரிகளும், யாழ்ப்பாணத்தில் 10 அதிகாரிகளும், வவுனியாவில் 5 அதிகாரிகளும், கொழும்பில் 6 அதிகாரிகளும் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய தினம்முதல் -

இது வரை யான காலப்பகுதியில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க உயரமட்டக் குழு சிங்கப்பூர் பயணமாகியது !

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தர்கள் குழுவொன்று சிங்கப்பூருக்குப் பயணமாகியுள்ளது.

சபாநாயகர் டபிள்யு ஜே.எம் லொக்கு பண்டார, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகி யோர் அடங்கிய குழுவே சிங்கப்பூர் சென்றுள்ளது.

ஐ.தே.கவின் முக்கியஸ்தர் பலரும் சிங்கப்பூர் சென்றிருப் பதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாதபோதும் - இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமெனத் தெரி விக்கப்படுகிறது. இவர்கள் சிங்கப்பூரில்- முன்னாள் முதலீட்டுச்சபைத் தலைவர் அர்ஜுன மகேந்திரனைச் சந்திக்க விருப்பதாகவும் கூறப்படுகிறது.

# அரச ஊடகங்களுக்கு ஆலோசனை நால்வர் அடங்கிய குழு அமைப்பு!

(கொழும்பு)

அரச ஊடகங்கள் செயற்பட வேண்டிய முறைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு, தகவல் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் நால்வர் அடங்கிய குழுவொன்றினை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் இரவு ஜனாதிபதி மாளிகையில் - ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக அந்தக் கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து தெரிவிக்கப்படுவதாவது -

அரச ஊடகங்களின் பாவனையை உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்கும், தனியார் ஊடகங்களுடன் அரசஊடகங்கள் நல்ல தொடர்பைப் பேணும் வகையிலுமே இந்தக் குழுவினை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தகவல்கள் தெரிவித்தன.

முன்னாள் தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் றெஜினோல்ட் கூரே, பொதுஜன முன்னணியின் முன்னாள் தொடர்பாடல் அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா, தற்போதைய அரசின் பெருந்தெருக்கள் திணைக்களப் பிரதியமைச்சர் சி.வி.ஏக்கநாயக்க ஆகியோரே, இந்தக் குழுவின் மற்றைய மூன்று உறுப்பினர்களுமாவர்.

இவர்கள் வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மாலை ஐந்து மணிக்கு அரச ஊடகத்துறைத் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(தே)

# பட்டதாரிகளுக்கான நியமனம் நாடாளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசதுறைகளில் நியமனம் வழங்குவது தொடர்பாக, நாடாளுமன்றில் விவாதம் நடத்த வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி விடுத்த வேண்டுகோளுக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக, வர்த்தக நுகர்வோர்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இந்த விவாதத்தை நடத்துவதற்கு இரண்டு மணிநேரம் தருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா இந்த வேண்டுகோளை விடுத்ததாகவும், எனவே இந்த விவாதத்தை நடத்த நாடாளுமன்றில் ஒருநாள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒருநாள் ஒதுக்கப்பட்டபோதும், விவாதத்துக்கு இரண்டு மணிநேரம் போதுமானதாக இருக்குமென ஐக்கிய தேசியக் கட்சி தன்னிடம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

(தே)

### வெளிமாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட

# ஆசிரியர்களை கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து பிறமாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட தேசியக் கல்வியியற் கல்லூரி மூலம் தெரிவான ஆசிரியர்கள், பணிமாற்றம் தொடர்பாகக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலம் ஆசிரியர் கற்கைநெறியை முடித்து வெளியேறியவர்களுக்கு, வெளிமாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால், கல்வி அமைச்சின் செயலாளருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இதன்போது, கருத்து வெளியிட்ட கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் இந்த நடைமுறை, இந்த ஆண்டு முதல் அறிமுகம் செய்யப்படுவதாகவும், இந்தச் செயற்பாட்டில் உடன்பாடில்லாத வெளிமாவட்டங்களில் நியமனத்துக்கு தெரிவான ஆசிரியர்கள் - கல்வி அமைச்சின் திட்டமிடல் செயலாளர் அமரசிங்கவுடன் தொடர்புகொண்டால், நியமனங்களை மாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

# ஈ.பி.டி.பியினர் மூவர் தமிழகத்தில் கைது!

(இராமேஸ்வரம்)

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மூவரை, இராமேஸ்வரத்தில் வைத்துத் தாம் கைது செய்திருப்பதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் இருந்து படகு மூலம், சட்டவிரோதமாக தமிழகம் வந்து தங்கியிருந்தபோதே -மண்டபத்தில் வைத்து இவர்களைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேசராஜா நாயகம் (வயது 36), இவரது மனைவி தவமலர், மகன் நேசன் ஆகிய மூன்று ஈ.பி.டி.பியினரே கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படுவதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசுக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்கத் தயார்!

## முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்- சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளை -அரசின் சமாதானக்கொள்கைத் திட்டத்தில் சேர்த்தால், அரசுக்கு ஆதரவு வழங்கப்படுமென கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

அரசின் சமாதானப் பேச்சுவார்த்தைக் கொள்கைத்திட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள ஆலோசனைகள் கட்டாயம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அரசு உடன்படுமானால், அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கக் கட்சி தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள ஆலோசனைகளில்- கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீர்வும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைகளை சமாதானப் பேச்சுவார்த்தையின் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு, நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனிடம் தெரிவித்துள்ளதாகவும் ஹசன் அலி மேலும் தெரிவித்தார்.

(தே)

# அவசரகாலநிலை பிரகடனத்துக்கு இப்போது அவசியம் ஏதும் இல்லை !

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் அவசரகாலச் சட்டத்தை அமுல்செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இப்போது ஏற்படவில்லையென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பு வாரஇதழ் ஒன்று வெளியிட்ட செய்தி ஒன்று தொடர்பாக சட்டம் ஒழுங்கு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு - வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக கொழும்புப் பகுதியில் இடம்பெற்ற சில சூட்டுச் சம்பவங்களையடுத்து - தலைநகர் கொழும்பில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் மேல்மாகாணத்தில் மட்டும் அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்வதற்குத் திட்டமிட்டு வருவதாக கொழும்பு வார இதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால், மேல்மாகாணத்தில் தனியாகவோ அன்றி நாட்டின் வேறெந்தப் பகுதிகளிலுமோ அவசரகாலச சட்டத்தை அமுல் செய்வதற்கு இப்போது தேவை எதுவும் ஏற்படவில்லை.

நாடு முழுவதுக்குமான பாதுகாப்புத் திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி வருகிறது என்றும், பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

# 12 ஆயிரம் பொலிஸாரை ஆட்சேர்ப்பதற்கு திட்டம்

## ——பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் நிரந்தரப் படையணியில் 12000 வெற்றிடங்கள் இருப்பதாகவும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

சமீபத்தில் பொலிஸ் சேவைகளிலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட பதவியுயர்வுகள் காரணமாக கொன்ஸ்டபிள்களாக இருந்த ஆயிரக் கணக்கானோர் பொலிஸ் சார்ஜன்ட் தரத்திற்கு உயர்த்தப்பட்டனர்.

இதனால், பொலிஸ் கொன்ஸ்டபிள்களுக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(தே)

### வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர்

# 3 ஆயிரம் ரூபா வழங்கப்படாவிடின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்

## எழுதுனர் சங்கத் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்பு அரச ஊழியர்களுக்கு 3ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படாவிடின் நாடு முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதாக அனைத்து இலங்கை அரச எழுதுனர் சேவைகள் சங்கத்தின் தலைவர் ஜெயதாஸ தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவை வழங்குவது பற்றி ஜனாதிபதியோடு நடத்திய பேச்சுவார்த்தை பலனளிக்காது விட்டால் - இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும்

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்து அரச ஊழியர்களினதும் சம்பளங்களும், குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்பட்ட இருப்பதனால், அதுவரை 3 ஆயிரம் ரூபா வழங்கமுடியாமல் இருப்பதாகவும் ஜனாதிபதி தொழிற்சங்கத் தலைவர்களுடனான சந்திப்பின் போது கூறியுள்ளார்.

அரச ஊழியர்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையை தான் விளக்கிக் கொண்டாலும், பொருளாதாரக் கஷ்டத்தினால் இந்தக் கொடுப்பனவை வழங்க முடியாதிருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சம்பளம் உயர்வை அதிகரிக்கும் வரை அவர்களுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவது குறித்து ஜனாதிபதிக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது ஜனாதிபதியினால் இது குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

(தே)

# சமாதானப் பேச்சுக்கள் தாமதமாவதை உதவி வழங்கும் நாடுகள் விரும்பவில்லை

## அரசு - புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சி

இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்ந்து தாமதமாகி வருவது குறித்து தமது கவலையை வெளிப்படுத்தியும் முடிந்தளவு விரைவாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வலியுறுத்தியும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தலைவர்கள், மற்றும் அமைப்புகளின் தலைவர்கள் இணைத்து அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்காக அடுத்து வரும் சில தினங்களுக்குள் விசேட அறிபிப்பு ஒன்றை வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக தூதுவராலய வட்டாரங்களின் செய்திக்குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிவிப்பின் மூலம் தற்போது இலங்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிகள் குறித்தும் வெளிப்படுத்தப்படவுள்ளது.

அரசுக்கு - ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக திருததமான கருத்துப் பரிமாற்றங்கள் நிகழவேண்டும் என்றும் இரு சாராரும் முரண்படாமல் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது கடினமானது என்றும் உதவி வழங்கும் நாடுகளின் தலைபர்களால் வெளியிடப்படும் அறிக்கையில் குறிப்பிடப்படவுள்ளது.

இந்த உதவி வழங்கும் குழுவின் இணைந்த தலைவர்களால் நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா ஆகிய நாடுகளின் உயர்மட்டத் தலைவர்கள் அங்கம் வகிக்கவுள்ளனர்.

(தே)

# இலங்கையுடனான முதல் டெஸ்ட்; தென்னாபிரிக்கா சமன் செய்தது!





(கொழும்பு)

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சம நிலையில் முடிவடைந்தது.

முன்னதாக, 325 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி எவ்வித விக்கெட் இழப்புமின்றி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பின்னர் நேற்று தனது ஆட்டத்தை ஆரம்பித்த அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை 34 ஆக இருந்தபோது, டிப்பென்னர் 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முரளியின் பந்துவீச்சில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் அணித் தலைவர் சிமித்துடன் இணைந்தவர் வான் ஜார்ஸ்வெல்ட். இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் ஜார்ஸ்வெல்ட் 29 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் டில்சானின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார் அவ்வேளை அணியின் ஓட்ட எண்ணிக்கை 98.

பின்னர் சிமித்துடன் இணைந்தவர் கலிஸ். இவர்கள் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் சிமித் 74 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் உபுல் சந்தனவின் பந்து வீச்சில் நேரடியாகவே போல்ட் ஆனார்.

இதன் பின்னர் கலிஸுடன் இணைந்தவர் றுடோல்ப். இவர்கள் இருவரும் ஆட்ட நேரம் முடியும்வரை ஆட்டமிழக்காமல் முறையே 52, 27 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் அவ்வணி 3 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 486 ஓட்டங்களையும் 2 ஆவது இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 376 ஓட்டங்கள். 2 ஆவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்கள்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஜெயவர்த்தன தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

# கென்ய உதைபந்தாட்ட அணி மீதான தடைநீக்கம்!

கென்ய உதைபந்தாட்ட அணிக்கு விதிக்கப்பட்ட தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. கென்ய உதைபந்தாட்ட அமைப்பில் பயங்கரக் குழப்பம்.

முறைகேடுகள் செய்து, தலைமைப்பொறுப்பை சிலர் கைப்பற்றியதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்தக் குழப்பதையடுத்து, சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க - கென்ய அணிக்கு சர்வதேச உதைபந்தாட்ட சங்கம் கடந்த ஜூன்மாதம் தடைவிதித்தது. இந்தத் தடையை நீக்கவேண்டுமென கென்ய உதைபந்தாட்ட வீரர்கள் தொடர்ந்து வேணடுகோள்விடுத்தனர். உச்சக்கட்டமாக கென்ய நாட்டின் தடகள பிரபலம் கிப்கீனோ தலைமையில் ஒரு குழு சர்வதேச உதைபந்தாட்டச் சங்கப் பிரதிகளைச் சந்தித்துப்பேசியது.

இந்தச் சந்திப்பின்போது, கென்ய உதைபந்தாட்டச் சங்கத்தில் முறைகேடுகளைக் தவிர்த்து ஒழுங்குபடுத்துவதாகவும் உறுதியளித்தது. இதையடுத்து கென்ய உதைபந்தாட்ட அணிக்கு விதிக்கப்பட்ட தடையை, தற்காலிகமாக நீக்குவதாக சர்வதேச உதைபந்தாட்ட அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் கெனய அணி 2006 உலகக் கோப்பை மற்றும் தகுதிச்சுற்றுப் போட்டிகளில் பங்கேற்கலாம்.

# ஆசியக் கிண்ண உதைபந்தாட்டம் ஜப்பான் மீண்டும் சம்பியனானது!

(பீஜிங்)

சீனாவில் நடைபெற்றுவந்த ஆசியக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் சீன அணியைத் தோற்கடித்து ஜப்பான் அணி சம்பியனாகத் தெரிவானது.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் - உதைபந்தாட்டத்தில் பரம்பரை எதிரிகளான ஜப்பானும், சீனாவும் மோதின. சுமார் 60 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்ட இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் -

ஜப்பான் வீரர்கள் முதலாவது கோலை அடித்தனர். இதன் பின்னர் சீன அணி ஒரு கோலை அடித்துச் சமன்செய்தது.

இதனையடுத்து இரண்டு கோல்களை ஜப்பான் அணி அடித்தது. இரண்டாவது கோலை ஜப்பானிய வீரர் அடித்தபோது அது கையிற் பட்டுச் சென்றதாகச் சர்ச்சைகள் எழுந்ததால், ரசிகர்கள் மைதானத்துள் புகுந்தனர்.

இதனையடுத்து, அங்கு சுமார் 6 ஆயிரம் பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு போட்டி தொடர்ந்தது.

இந்தப் போட்டியில் ஜப்பான் அணி 3:1 என்ற அடிப்படையில் சீன அணியைத் தோற்கடித்தது.

ஆசியக் கோப்பையை ஜப்பான் மூன்றாவது முறையாகக் கைப்பற்றியுள்ளது. 1992 ஆம் ஆண்டும், 2000 ஆம் ஆண்டும் அந்த அணி சம்பி



யன் பட்டம் பெற்றிருந்தது. ஈரான், சவூதி அரேபியா அணிகள் தலா மூன்று முறையும், தென்கொரியா இரண்டு முறையும் குவைத், இஸ்ரேல் அணிகள் தலா ஒரு முறையும் ஆசியக் கோப்பையைக் கைப்பற்றியிருந்தன.

இதேவேளை, ஆசியக் கிண்ணத் தொடரில் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஈரான், பஹ்ரான் அணியை வீழ்த்தியது.

நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாம் இடத்துக்கான போட்டியில் ஈரான், பஹ்ரான் அணிகள் மோதின. இதில் ஈரான் அணி 4:2 என்றகோல் கணக்கில் பஹ்ரானை வீழ்த்தி மூன்றாம் இடத்தைக் கைப்பற்றியது.

ஈரான் அணியின் அலிடேயி அபாரமாக ஆடி கடைசிப் பத்து நிமிடங்களில் இரண்டு கோல்கள் அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் மீண்டும் சாஹிற் அப்ரிடி சேர்ப்பு!

ஹொலண்டில் இந்த மாதம் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டி மற்றும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி சம்பியன் போட்டிக்கான 14 பேர்கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் சகலதுறை ஆட்டக் காரரும், துடுப்பாட்ட வீரருமான சாஹிற் அப்ரிடி இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

"பாகிஸ்தான் அணிக்கு லெக்ஸ் பின்னர் தேவை என்பதாலும், தவிர துடுப்பாட்டமும் செய்யக்கூடியவர் அப்ரிடி. அவரது அனுபவத்தின் அடிப்படையில்தான் அவா மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்" என்று பாகிஸ்தான் தலைமை தேர்வாளர் வாசிம்பாரி தெரிவித்தார்.

27 வயதான அப்ரிடி 1997 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 37 பந்துகளில் சதமடித்துச் சாதனை படைத்தவர். தவிர 176 ஒருநாள் போட்டிகளில் பங்குகொண்டிருக்கிறார்.

கடைசியாக கடந்த மார்ச் மாதம் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் பங்குகொண்டார். கடந்த மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பெறவில்லை.

சகலதுறை வீரர் மொகமது ஹபீஸைச் சேர்ப்பதா அல்லது அப்ரிடியைச் சேர்ப்பதா என்று தேர்வுக் குழு உறுப்பினர்கள் ஆலோசனை செய்தோம். ஏற்கனவே ஒப்ஸ்பின் வீசக் கூடிய சொகைப் மலிக் இருப்பதால அப்ரிடியைத் தேர்வுசெய்தோம் என்று பாரி கூறினார்.

கடந்த மாதம் இலங்கையில் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியல் கலந்துகொண்ட துவக்க வீரர் இம்ரான் நசீர் மற்றும் டேனிஷ் கனேரியா ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தவிர இடதுகை துவக்க வீரரான சல்மான்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் முல்தானில் பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்குகொண்டார்.

**பாகிஸ்தான் அணி**

இன்சமாம் உல்ஹக் (கப்டன்) யூசுப் யுகானா (துணை கப்டன்), இமரான் பர்ஹட், சல்மான் பட், யாசிர் ஹமீட், யுனுஸ்கான், சொகைப மலிக், சாஹிற் அப்ரிடி, அப்துல் ரசாக், மொயின் கான் (விக்கெட் கீப்பர்), முகமது சமி, சொகைப் அக்தர், ஷபீர் அகமது, ரானா ஹசன்.

******* இன்னும் 05 நாட்களில் ******




## தாச்சி போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழ அணியை எதிர்த்து மானிப்பாய் ஆனந்த விளையாட்டுக் கழகம் மோதுகிறது.

இந்தப் போட்டி சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

# மாஸ்டர்ஸ் ரெனிஸ் அரையிறுதியில் அகாஷி!

சின்சினாட்டியில் நடைபெற்று வரும் மாஸ்டர்ஸ் தொடர் ரெனிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்துக்கு அமெரிக்காவின் ஆந்ரே அகாஷி முன்னேறியுள்ளார்.

தரவரிசையில் 11 ஆவது இடத்திலுள்ள அகாஷி, வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் 7-6 (12), 6-3 எனற செட் கணக்கில் ஸ்பெயின் வீரர் கர்லோஸ் மோயாவின் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

மற்றொரு ஆட்டத்தில், தரவரிசையில் 2 ஆம் இடத்திலுள்ள அமெரிக்காவின் அண்டிரொடிக் 6-3 என்ற நேர் செட்களில் ஜேர்மனி வீரர் டொமி ஹகைத் தோற்கடித்து அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

வெற்றிபெற்ற இருவரும் அரையிறுதியில் மோதவுள்ளனர்.

## மாகாண மட்ட உதைபந்தாட்டம்

# கிளிநொச்சி மாவட்ட அணி முதலிடத்தைப் பெற்றது

தேசிய ரீதியாக விளையாட்டு அமைச்சினால் முதல் முதலாக மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் வடக்கு கிழக்கு மாகாணமட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணி முதலிடம் பெற்றது.

மாகான மட்ட இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது இப்போட்டியில் மன்னார் மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணியை 0-6 கோல்கணக்கில் கிளிநொச்சி மாவட்ட அணி வென்றது.

மாகாணமட்ட அரையிறுதி ஆட்டத்தின்போது யாழ்.மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணியை 0-3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. இந்த கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட பெண்கள் அணி தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டியில் பங்கேற்றது






## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை

# தலைமைப் பொறுப்பிலிருந்து ரமீஸ் ராஜா விலகினார்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகிப் பொறுப்பிலிருநது ரமீஸ்ராஜா ராஜினாமா செய்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகிப் பொறுப்பு வகித்த ரமீஸ்ராஜா - தனியார் தொலைக்காட்சி கிரிக்கெட் வர்ணனையாளராகவும் பணிபுரிகிறார். தொலைக்காட்சி வர்ணனையாளராக இருந்து கொண்டு, கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகிப் பொறுப்பையும் ரமீஸ் திறம்படக் கவனிக்கமுடிவதில்லை எனக் குற்றச்சாட்டுக் கிளம்பியது.

இதனால், கிரிக்கெட் நிர்வாகிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் ரமீஸ் தனது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

## சேதமுற்ற பாலங்களைத் திருத்துவதற்காக

# படை நிலைகளைப் பின்நகர்த்த இராணுவத் தளபதி இணக்கம்!

### செயலகக் கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த நிலையிலுள்ள சில பாலங்களைப் புனரமைப்பதற்கு வேண்டிய இடவசதி தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பொன்று, யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவைச் சேர்ந்த பொறியியலாளர் எஸ்.நல்லதம்பி, யாழ். செயலகப் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, மேலதிக அரச அதிபர் சிவசுவாமி, இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு யாழ். மாவட்டத்தில் தற்போது சேதமடைந்த நிலையில் காணபபடும் பாலங்களான - கைதடி, நாவற்குழி, கோப்பாய், தொண்டைமானாறு, வண்ணாத்திப் பாலம், கப்புத்தூர், அராலி போன்ற பாலங்களைப் புனரமைப்பதற்கு அந்தப் பாலங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை 300 மீற்றர் தூரம் பின்தள்ளியிருக்குமாறு கேட்கப்பட்டது.

இதற்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சம்மதம் தெரிவித்ததுடன், பாலங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை 300 மீற்றர் தூரத்திற்கு அப்பால் தமது நிலைகளை அமைப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, யாழ். நகரின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தீ)

## உசன் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி

# தென்மராட்சி செயலகம் முன் இன்றுமுதல் மறியற்போராட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி உசன் பகுதியில் உள்ள குடியிருப்புக்களிலிருந்து படையினரை உடனடியாக வெளியேற்றி, அப்பகுதியில் மீளக்குடியமர அனுதிக்கக்கோரி அந்தப் பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பு இன்றுமுதல் தொடர்ச்சியான மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

குடாநாட்டை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததையடுத்து உசன் பகுதியில் முகாமிட்டனர். இதனால், இங்கிருந்து வெளியேறிய மக்களை சொந்த இடத்துக்குச் செல்வதற்கு படையினர் அனுமதிமறுத்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிவரும் மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு படையினரிடமும் கோரிக்கை விடுத்தனர். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியோரிடமும் தாம் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும், மீளக்குடியமர்வதற்கு படையினர் இதுவரை சாதகமான பதில் வழங்காததையடுத்து நாளை முதல் தொடர்ச்சியான மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

# பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர, க.பொ.த உயர்தர வகுப்புக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மனித உரிமைகள் கல்வியை விருத்திசெய்யும் நோக்கில் 'முரண்பாடு தீர்த்தலும் தலைமைத்துவப் பயிற்சி வழங்கலும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றினை, போருக்கு எதிரான தேசிய முன்னணியினர் நடாத்தவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு நாளை காலை 10.30 முதல் மாலை 2.30 வரை யாழ்.மத்திய கலலூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் கிடைக்கும் அறிவுக்கு மேலதிகமாக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பாதுகாத்துக் கொள்வதிலுள்ள முக்கியத்துவம், முரண்பாடுகளை நிராகரித்துக்கொள்ளும் முறை, சமாதானமும் அபிவிருத்தியும் போன்ற விடயங்களில் பரந்தளவிலான வேலைத்திட்டம் ஒன்றினை கருத்தரங்கின்போது நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்த முன்னணியினர் தெரிவித்தனர். (31)

## 2004/2005 கல்வியாண்டில்

# ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

(மானிப்பாய்)

அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை 2004/2005 கல்வியாண்டுக்கு, பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கல்வியமைச்சு கோரியுள்ளது.

ஆங்கிலததை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறிக்கும், விஞ்ஞானப்பட்டப் பாடநெறி கற்பதற்கும் இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக, ஆங்கிலப் பாடத்துடன் கலை, விஞ்ஞானத்தகைமை (வெளிவாரி)ப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்தே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டீ மெல் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை இரண்டு பிரதிகளில் - செயலாளர், கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இலங்கை பல்கலைக் கழங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் - 2004/2005 என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளராலும் - அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பங்கள், உரிய அதிபர் அல்லது முகாமையாளர் என்பவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

இதன் மேலதிக விபரங்கள் கடந்த 6 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (100)

# கிராமங்களின் அபிவிருத்திப் பணிகளில் சகலரும் ஒன்றிணைந்து ஈடுபடவேண்டும்

### மட்டுவில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் தெரிவிப்பு

இரண்டாயிரமாம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய யுத்தம் மற்றும் இடம்பெயர்வு காரணமாக மிகவும் மோசமான அழிவுகளையும், சேதங்களையும் கண்டது எமது மட்டுவில் வடக்குக் கிராமம். இன்று துரித அபிவிருத்தியை எதிர்நோக்கியுள்ள இந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு எம்மாலான சகல பங்களிப்புக்களையும் நாம் நல்கவேண்டும். அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ உதவிபுரியும் என நாம் நம்பியிருக்காது, நமது தேவைகளை நாமே நிறைவுசெய்து கொள்ளப் பழகுதல்வேண்டும் என மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் நா.சின்னத்தம்பி தெரிவித்தார்.

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ள வீதிகள், வீடுகள் புனரமைக்கப்படல், விவசாயக்குளங்கள், வாய்க்கால்கள் திருத்தல், மின்சார இணைப்பு, போக்குவரத்து, தபால் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற விடயங்களிலும், சமூக பொருளாதார கலாசார அபிவிருத்தியிலும் எமது சங்கம் அதீத கவனஞ்செலுத்திச் செயற்படவுள்ளது.

இந்தப் பணியில் மட்டுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், அனைவரும ஒத்துழைப்பு நல்கவேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்புரிமை பெறுதல் வேண்டும். அங்கத்துவப் பணமாக ரூபா 25 ரூபாவும், மாதாந்தச் சந்தாவாக 10 ரூபாவும் செலுத்துவதன் மூலம் உறுப்பினராக இணைந்துகொள்ளமுடியும் எனத் தெரிவித்தார்.

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலையில் இடம்பெற்ற அங்குரார்பபண நிகழ்வில் - மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.உமாபாலன் ஆகியோர் முன்னிலையில் சங்க உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்படி தலைவராக டொக்டர் சின்னத்தம்பியும், செயலாளராக செ. சுதாகரனும், பொருளாளராக பொ. தெய்வேந்திரனும், உபதலைவராக செ. சிவஞானமும், உப செயலாளராக க.சரவணபவானும், 8 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : த.தனுஸ்காந்த்
முகவரி : முள்ளிவாய்க்கால் மேற்கு, முல்லைத்தீவு

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------------------------
முகவரி :----------------------------
பிறந்த ஆண்டு:----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------------
பெற்றோர் ஒப்பம்


# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரியார் சிலை பிரதிஷ்டை!

(வடமராட்சி)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஐம்பொன்னாலான திருமுருக கிருபானந்த வாரியாரின் உருவச்சிலை ஒன்று அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்தியாவில் வடிக்கப்பட்ட 21 கிலோகிராம் நிறையுள்ள இந்தச் சிலை - லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டது.

லண்டனில் வசித்துவரும் ஊர்காவற்துறை கரம்பொன்னைச் சேர்ந்த நா.சிவானந்தஜோதி என்பவரால் இந்தச் சிலைக்கான நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் ஆசியுரையுடன் இந்தச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட நிகழ்வில், பல சமயப் பெரியார்களும் கலந்துகொண்டனர். (14)

### காலாவதியான பொருட்கள் அழிப்பு

சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள், கச்சாய் வீதி மற்றும் நகர்ப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள்மீது மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது, காலாவதியான சோயா, பால்மா பிஸ்கெட் வகைகள் என்பன கைப்பற்றப்பட்டு அழிககப்பட்டன. இத்தகைய திடீர் சோதனை நடவடிக்கையினை சுகாதார பரிசோதகர்கள் தீவிரப்படுத்தி உள்ளனர். (29)

## தென்மராட்சி பிரதேசத்தில்

# குடும்ப அங்கத்தவரின் வருமானம் கிராம அலுவலர்களால் மீளாய்வு!

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலக பிரிவு ரீதியாக குடும்ப அங்கத்தவர்களின் வருமான விபரங்களை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்கென ஒவ்வொரு கிராம அலுவலருக்கும் விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

அ, உ அட்டைகள் வேறுபாடின்றி அனைத்துக் குடும்பத்தவர்களும் தத்தமது கிராம அலுவலரிடம் சென்று விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து ஒப்பமிட்டு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே, எதிர்காலத்தில் வழங்கப்படும் உதவிகள் குறித்த முடிவுகள் எடுக்கப்படுமாகையால், அனைவரும் உடன் இந்தப் பணிக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

### லக்ஸ்பிறே பைக்கற்றுக்கள் அன்பளிப்பு

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக, வல்வெட்டித்துறை ஆலடியைச் சேர்ந்த சாமிக்கண்டு புவனேஸ்வரன் என்பவர் 20 லக்ஸ்பிறே மாப்பைக்கற்றுக்களை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கையளித்துள்ளார். (14)

### சின்னமுத்து தடுப்பூசி மருந்து ஏற்றல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 16 வயது முதல் 20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு சின்னமுத்து, ஜேர்மன் சின்னமுத்துத் தடுப்பூசி எதிர்வரும் செப்ரெம்பர், 11 ஆம், 12 ஆம், திகதிகளில் - பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பவற்றுடன் தொடர்புகொண்டு, இந்தத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளலாம் என சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (29)

### மோட்டார் சைக்கிள் ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்

(சங்கானை)

எதிர் எதிரே வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், ஓட்டோவும் விபத்துக்குள்ளாகியதில், மோட்டார் சைக்கிளில் சென்றவர் காலில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில், காரைநகரைச் சேர்ந்த க.பஞ்சலிங்கம் என்பவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் சேதத்துக்குள்ளாகியதுடன், அவர் மதுபோதையில் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை சங்கானை பஸ் நிலைய பிரதான வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (47)

### ஊனமுற்றோருக்கான கிராமிய மட்ட நிறுவன கூட்டம்

பருத்தித்துறை பிரதேச செயலக ஊனமுற்றோர்களுக்கான கிராமிய மட்ட நிறுவனத்தின் பருத்தித்துறைப் பிரதேச கூட்டம் இன்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில், பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுளளது. (14)




# பெண்ணை வதைத்திடலாமா?



சிறுகதை



ச. முருகானந்தன்

மதியப் பொழுதிலேயே வானம் இருண்டு போய் இருந்தது. பெரு மழைதான் பொழியப் போகிறது என்று தோன்றியது.

இனிதாகக் கழிந்திருக்க வேண்டிய இன்றைய விடுமுறை நாள் பகல் பொழுது இப்படி ஆகுமென்று சுந்தரோ, இந்திராவோ நினைத்திருக்கவில்லை.

இந்திராவுக்கு இன்னும் படபடப்பாக இருந்தது. என்னதான் கட்டிய கணவனேயாயினும் கன்னத்தில் கைநீட்டி அடித்த சுந்தரின் செயலை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

அவளும் இப்படிக் கத்திப் பேசியிருக்கக் கூடாதுதான். இது நாள்வரை தான் இப்படிக் கோபமாகக் கத்தியதில்லையே, இன்றுமட்டுமேன் என்ற குற்ற உணர்வு மனதை ஒரு கணம் அரித்தது. எனினும் அந்த எண்ணம் சட்டென மறைந்துபோக, மனதிலிருந்து பெண்ணியச் சிந்தனைகள் விஸ்பரூபமெடுத்தன.

'எல்லாவற்றிலும் பெண்கள் பணிந்து போகத்தான் வேண்டுமா? நான் விவாதித்ததில் என்ன தவறு? இவை எல்லாம் சொல்லிக் காட்ட வேண்டியவைதானே? நானும் அவரைப் போலவே தினமும் வேலைக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறேன். அத்தோடு வீட்டு வேலைகள் எல்லாம் தலைமேல் சுமந்து செய்து முடிக்கிறேன். இத்தனை வேலைகளையும் மாடு மாதிரிச் செய்து கொண்டிருக்கிறேன் என்ற எண்ணம் கூட இல்லாமல் உழைத்திருக்கிறேன். யாருக்காக? மனப் பரபரப்பு விழியோரங்களில் துளிர்க்க, புருவங்களைச் சுருக்கிக் கொண்டாள் இந்திரா.

சுந்தரின் மனதிலும் புயல் அடித்துக் கொண்டிருந்தது. 'இந்திராவா பேசினாள்? அதுவும் என்னையா பேசினாள்? திருமண வாழ்வின் இன்ப இரகசியமே விட்டுக் கொடுப்புதான் என்று இவளுக்குத் தெரியாதோ?'

கிராமத்துப் பெண்ணாக அவளைக் கைப்பிடித்து வந்த போது என்னமாய் இருந்தாள். கணவனே கண்கண்ட தெய்வம் என்று வாழ்நது வந்த அவளின் 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புரிசன்' என்ற பழமை வாதச் சிந்தனையை அவளிடமிருந்து மாற்றியவனே அவன் தானே? காலையில் எழுந்ததும் அவன் பாதங்களைத் தொட்டு வழிபட்டவளை, நீ என்ன செய்தாலும் 'பெய்' என மழை பெய்யாது என்று கிண்டலடித்து, 'அன்பு மனதில் இருந்தால் போதும்' என்று தடுத்துரைத்தான்! அவளது பெண்ணியச் சிந்தனைகளை மேம்படுத்த சக்தி, சினேகிதி, அவள், மங்கையர் மலர் போன்ற சஞ்சிகைகளை எல்லாம் அவளுக்கு அறிமுகப்படுத்திப் பெண் விடுதலை பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்திய அவனைப் பார்த்தா இன்று முழக்கமிடுகின்றாள்?

சுந்தருக்கு எரிச்சலாக வந்தது. எனினும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவளருகே வந்து 'இந்திரா பசிக்குது, சாப்பிடுவோம் வா' என்று அழைத்தான்.

"எனக்குப் பசிக்கலை... சாப்பாடு எல்லாம் எடுத்து மேசையில வைச்சிருக்கு... போட்டுச் சாப்பிடுங்க..." என்று படுக்கையிலிருந்தே கூறிவிட்டு, மறுபக்கம் திரும்பிக் குழந்தையை அணைத்தபடி கண்களை மூடினாள்.

"இப்ப எதுக்கா என்கூடக் கோபிக்கிறே? ஏதோ மனதில் பட்டதைச் சொல்லிவிட்டேன். காலையில் இருந்து நீ ஒன்றுமே சாப்பிடவில்லை. ஓய்வில்லாம வேலை செய்து களைசசிருக்கிறே. குழந்தைக்குப் பாலூட்டு. கோபத்தில வயிற்றுக்குத் துரோகம் செய்யாதே. சுந்தர் இன்ன மும் பொறுமையை இழக்காமல் கூறிக் கொண்டிருந்தான்.

"இப்ப புரியுதுதானே? எல்லா வீடுகளிலேயும் பெண்கள் தான் கடுமையாக உழைக்கிறார்கள்."

ஆண்கள் அவளை ஒரு வேலைக்காரியாக, அடிமையாகத்தான் நடத்திறாங்க... "இதைத்தான் எனது கட்டுரையில் எழுதியிருந்தேன்."

இந்திரா மீண்டும் வற்புறுத்தினாள். அவன் பதில் சொல்லாமல் தலையை உதறிக்கொண்டான்.

இன்றைய காலை வாரமலரில் இந்திரா எழுதியிருந்த பெண்ணியக் கட்டுரை பற்றி அவர்களிடையே ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் தான், அவர்களிடையே ஏற்பட்ட முறுகலுககு காரணம். சுந்தர் பெண்ணியச் சிந்தனைகளை மதிப்பவன்தான்.

[illegible] பெண் விடுதலை பற்றி எழுதுபவர்களிலும், பேசுபவர்களிலும் சிலர் எப்போதுமே ஆண்களை கொடியவர்களாக சித்திரிப்பதை அவனாலும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

காலையில் அவளது கட்டுரையில் ஆண்கள் அளவுக்கதிகமாக கொச்சைப் படுத்தப்பட்டுள்ளதாக அவனுக்குத் தோன்றியது. அபிப்பிராயத்தை எதிர்பார்த்துக் காத்து நின்றவனிடம், "பெண் விடுதலை என்றால் என்னவென்று நீ நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

"உங்களுக்குத் தெரியும்தானே" என்று கூறியவள் தொடர்ந்தாள்... "பெண் விடுதலை என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. பெண் குடும்பத்திலும், சமூகத்திலும் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும், சமவுரிமையுடனும் வாழ்ற நிலை என்று சுருக்கமாகக் கூறலாம். குடும்பங்களில் பெண்கள் ஆண்களைப் போலவே நடத்தப்படவேணும். குடும்பப் பொறுப்புக்கள், வேலைகள் எல்லாம் அவள் மீது முழுமையாகச் சுமத்தப்படக்கூடாது. வேலைப்பழுக்களைப் பகிர்ந்து கொள்ளணும். பெண்கள் சுதந்திரமாகத் தீர்மானம் எடுக்கவும், செயற்படவும் உரிமை இருக்கணும்..." என்றாள்.

"வேற....?" அவன் புன்சிரிப்புடன் நோக்கினான்.

"சமூக ரீதியில் கல்வி, வேலை வாய்ப்பு, சமசம்பளம், அரசியல் சுதந்திரம் எல்லாவற்றிலும் ஆண்களுக்கிருக்கின்ற உரிமைகள் பெண்களுக்கும் இருக்கணும்...." இந்திரா அடுக்கிக் கொண்டுபோக சுந்தர் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க...?"

"நீ இப்ப என்னையும் மிஞ்சிட்டாய்..."

"நீங்க இப்படிப் பொறாமையாக விமர்சிக்கிறது கூட ஆணாதிக்க சிந்தனைதான்."

"அதை நீ ஏன் அப்படி நோக்குகிறாய்?... இப்படி நீ நோக்குகிறதே காழ்ப்புணர்ச்சியாகலாம். உனது கட்டுரையில் கூட ஆண்வர்க்கத்துக்கு எதிரான கோசம் தொனிக்குது. எதிரி ஆண்களல்ல. ஆணாதிக்க சமுதாயம் தான் என்பதைப் பெண்ணியக்காரர்களில் சிலர் மறந்து விடுகின்றார்கள்."

"சுந்தர், வாயில்லாப் பூச்சிகளாக இருந்த பெண்கள் இன்று எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விழிப்படைந்து அநீதிகளைத தட்டிக் கேட்கிற உங்களைப் போன்றவர்களுக்குப் பிடிக்கவில்லை, என்று நினைக்கிறேன்..." இந்திரா காரமாகப் படபட என பொரிந்து தள்ளினாள்.

"இல்லை இந்திரா... நீ பெண்ணியம் பற்றி எழுதுகிறபோது, கருத்தரங்குகளில் உரையாற்றும் போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? நீ எழுதுகிற அழகு, பேசுகிற அழகு... அவன் சொல்லிக் கொண்டு போகும் போதே அவள் இடைமறித்தாள். "அழகு என்கிற ஆயுதத்தைப் பாவித்தே ஆண்கள் பெண்களை அடிமையாக்கிவிடுகிறார்கள். கவிதை, கதைகளிலும், சினிமாவிலும் பெண்களைத் துகிலுரித்து விபச்சாரம் நடத்துகிறார்கள்"

"அதற்குப் பெண்கள் உடந்தையாக இருக்கிறார்கள்தானே?... அது கிடக்கட்டும். அழகை ரசிக்கிறதுகூடத் தவறு என்கிறாயா? அப்படியானால் ஆண், பெண் உறவு கூட அபத்தமாகி விடுமே!" சுந்தர் பவ்வியமாக எடுத்துரைத்தான்.

இந்திரா விட்டுக் கொடுப்பதாயில்லை. "ஆண். பெண் உறவில் கூடப் பெண்ணடிமைத்தனம் தான் தலைதூக்குது. உலகெங்கும் எத்தனை பாலியல் வன்முறைகள், தினசரி நடக்கிறது! தினமும் பயணங்களின் போது கூடப் பஸ்களில் பெண்களை உரசுகிறார்கள். அலுவலகங்களில் மேலதிகாரிகள் பெண் ஊழியர்களில் குளிர்காய நினைக்கிறார்கள். ஏன் எத்தனையோ குடும்பங்களில் கூட மனைவியர் கணவன்களால் வல்லுறவுக்கு உட்படுத்தப் படுகிறார்கள்."

விவாதம் செய்யத் தொடங்கிவிட்டால் இந்திரா இப்படித்தான். இதனால் அவளைச் சிலர் வாய்க்காரி என்றும் கூறுவதுண்டு.

இப்போது சுந்தருக்கும் கொஞ்சம் கோபம் வந்தது. "இது கொஞ்சம் அபத்தம். ஒரு குடும்பத்தில் கணவன் தன் மனைவியுடன் உறவு கொள்ளுறதும், தவறு என்கிறாயா?

"உறவு கொள்ள அணுகுவதில் தவறில்லை. ஆனால், அவளுக்கு "விருப்பமில்லாத போது வற்புறுத்தித் துன்புறுத்திறது தான் தவறு..." இந்திரா கூறவே சுந்தர் சினம் கொண்டான்.

"இந்திரா... என்ன ஒரு அதிகப் பிரசங்கித் தனமான கருத்து இது. உலகில் இயற்கையின் நியதி. ஆண் தான் பெண்ணை உறவுக்கு அழைப்பது. தேனீ, சேவல், எருது இவற்றையெல்லாம் நீ பார்க்கவில்லையா?"

"சுந்தர்... மனிதனுக்கு ஆறறிவு என்பதை மறந்து பேசுகிறீர்களே. உங்களைச் சொல்லித் தவறில்லை. ஏன் நீங்கள் கூட அப்படிப்பட்டவர்தானே. எப்போது என்னைச் சும்மா படுக்க விட்டீர்கள்? குழந்தை பிறந்திருந்த கூட்டுக்குள்ளேயே கேட்டனீங்கள்தானே?"

இப்போது உண்மை சுட்டது. "இந்தரா வாயை மூடு..." அவன் கர்ஜித்தான். "நீ மட்டும் திறமோ?"

"இப்ப ஏன் இப்படி அடக்கப் பார்க்கிறீங்க? படித்த புத்திஜீவியான உங்கட இந்தக் கொள்கையை இந்த யுகத்திலையும் பெண்ணுக்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை, என்பதை எடுத்தியம்புது..."

அவனுக்கு அதிர்ச்சியாகவும், அவமானமாகவும் இருந்தது. தன்னுடைய கருத்துக்களுக்கும், சொற்களுக்கும் கிடைத்த அடியாக இதைக் கருதினான். இந்திராவை நிமிர்ந்து பார்த்தான். அவளது முகம் கழன்று விழுந்து, இப்போது சகிக்க முடியாத தோற்றமொன்று தெரிந்தது. அந்த முகத்தில் ஆணவமும், அகங்காரமும் தெரிந்தது.

"எளிய ..." முதன் முறையாக அவன் உதட்டுடன், உதடு பொருத்தி ஆபாசமான முத்தமொன்று இட்டுச் சென்ற வெறுப்பு. அது அவளுக்குக் கேட்டிருக்க நியாயமில்லைத்தான்.

"என்ன முனுமுனுக்கிறியள்?" அவளும் இன்னும் அடங்கிப் போவதாயிலலை.

அவன் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்.

"பெண் விடுதலை என்கிறது பெண்கள் தன்னிச்சையாக நடக்கிறது என்று நீ தப்பாகப் புரிஞ்சு வச்சிருக்கிறே. நீ மட்டுமல்ல, பெண்ணியம் பற்றிக் கதைக்கிற அடங்காப்பிடாரிகள் இப்படித் தான..." வார்த்தைகளில் கனதியைக் குறைத்திட அவனால் முடியவில்லை.

இப்போது அவள் மௌனமாக இருந்தாள். மீண்டும் எதுவித பயனுமற்ற இந்த வீண் விவாதத்தினால் ஆகப்போவது எதுவுமில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

அவனுக்கு ஆத்திரம் அடங்கவில்லை. "வீட்டோட பெண்டாட்டியாக இருந்த உனக்கு வேலை வாங்கித் தந்து வெளியுலகைக் காண்பிச்சது என்னுடைய தவறு..."

அந்தத் தீவிர கணத்தின் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளாதவளாக, மௌனத்தை, அவனது சொற்களின் கொடிய பற்கள் கிழிக்கவே சுய நினைவு கொண்டாள் இந்திரா.

குடும்ப வருமானம் காணாது என்று வேலைக்கு மனுப்போடச்சொன்னது நீங்கள். நானா கேட்டேன் வேலை வேணுமென்று? நான் படிச்சிருந்தேன். ஏ.எல் சித்தியடைந்திருந்தேன். 17 வயசில உங்களுக்கு கட்டிவைத்திராவிட்டால் பல்கலைக்கழகத்துக்குப் போயிருப்பேன். வெறும் விண்ணப்பப் படிவம் மட்டும் வாங்கித்தந்துவிட்டு வேலை எடுத்துத் தந்ததாக சொல்கிறீர்களே. பரீட்சை எழுதி சித்தியடைந்து நேர்முகத்தேர்விலையும் தெரிவாகிக் கிடைத்தவேலை இது.

படபடவென்று சொல்லும்போது அவளுக்கு மூச்சிறைத்தது. அவள் இப்படிக் கூறியபோது சுந்தருக்கு வ[illegible]டைத்துப் போனது. பேச்சை நிறுத்திவிட்டு அவளை முறைத்துப் பார்த்தான். என்னென்னவோ உணர்வுகளில் தவிப்பவன்போல முகம் இருண்டு கடுப்புடன் காணப்பட்டது. தொடர்ந்து வாதாடுவது முட்டாள் தனமான செயல் என நினைத்தான். எழுந்து வெளியில் போவாமா என்று கூட நினைத்தான். எனினும் அதனால் அவன் மனதில் என்ன தோன்றும் என்பதை முடிவுசெய்வதைக் கடினமாக உணர்ந்து திணறினான். இந்தச் சூழ்நிலையை தணிக்கவல்ல ஒரு சொல்லேனும் தன்னிடம் இருக்கின்றதா என்று தேடித் தோற்றுப்போய் மௌனமாக இருந்தான்.

ஆயினும் அவள் இம்முறை விடுவதாயில்லை. தன்பாட்டில் ஏதேதோ கூறி விம்பி வெடிக்க ஆரம்பித்தாள். 'சரி விடு இந்திரா. நீ சொல்கிறது எல்லாமே சரி நான்தான் கொடுமைக்காரன். இது எனக்கு வேணும். மூக்கைப் பிடித்தாள் வாயைத் திறக்கத் தெரியாமல் இருந்த உன்னை தமிழ்ச் சங்கத்தில் பேசுறளவுக்கு முன்னுக்கு கொண்டுவந்தது என்ரை பிழை...'

செய்கிற நல்ல காரியங்களை சொல்லிக்காட்டினால் அவை பெறுமதியற்றுப் போகும். அதை நான் சொல்லும் படிக்கு நீங்கள் நடக்கனும். அதைவிட்டுட்டு படிக்கிறது தேவாரம், இடிக்கிறது சிவன் கோயில் என்கிற மாதிரி நடக்கக்கூடாது. பெண்ணுரிமை பற்றி எமக்கு பிரக்ஞை ஏற்படுத்தவே நீங்கள் தான் நானும் விழிப்புணர்ச்சி பெற்று குடும்பத்தில் சமவுரிமையோடு நடக்க முயல்கின்ற போது குற்றம் காண்கிறீங்க.

சுந்தர் தடுமாறினான். இது மாதிரியான அசாதாரண கணங்களில் ஏற்கனவே தரிசித்த அதிர்வுகளும், கஷ்டங்களும் நினைவுக்கு வந்தன. எனினும் ஈகோ விடுவதாக இல்லை.

இந்திரா நீ புரியாமல் பேசுகிறாய். ஒரு விதமான ஒத்தாசையும் இல்லை என்றால் எதற்கு நீ என்றால் எனக்கு எதற்கு நீ பெண்டாட்டி?

வெறும் உடல் தேவைக்யென்றா ஒரு வைப்பாட்டியே போதுமே..

யார் கண்டது.. இப்போதும் கூட வைச்சிருக்கிறியளோ என்னமோ..? என்னை வேண்டாம் என்றால் சொல்லுங்கோ விவாகாரத்துக் கோருகிற உரிமை பெண்ணைக்கு இருக்கு... நீளமாய்க் கேவை

தவளை தடுத்தான் சுந்தர். இந்திரா..! ஓங்கியொலித்த அவனது குரலில் அவள் ஒரு கணம் வாயடைத்தாள்.

'பெரியபெரிய வார்த்தைகளை எல்லாம் ஏன் பாவிக்கிறாய்... பெண்மை என்றால் மென்மை இருக்கோனும்...'

நீங்கள் மட்டும் என்னவாம்? ஆண்மை என்றால் வன்மையா. அவளது வார்த்தைகள் வாவா என்று அவனைச் சண்டைக்கு அழைப்பதாக உணர்ந்தான். சுந்தர் கோபத்துடன் அவளை நெருங்கிய படி கன்னத்தில் படார் என்று அறைந்தான். பொம்பிளையெண்டால் அடக்க ஒடுக்கமாக இருந்து பழகு. எடுத்தது எல்லாத்துக்கும் வாய்காட்டாதே.

அடிபட்ட அவள் இன்னும் முனைப்புடன் கூச்சலிட்டாள்... அடி... அடி இது ஒன்றுதான் குறைச்சலாக இருந்தது. இதுவும் இன்றோடு அரங்கேறிவிட்டது. அவள் பேச மீண்டும் அவனது முரட்டுக் கரங்கள் அவளது கன்னத்தைப் பதம் பார்த்தன. திகைத்துப்போன இந்திரா அழுது கொண்டு அறைக்குள் சென்று கட்டிலில் வீழ்ந்தாள்.

சற்றுமுன்னர் நடந்துமுடிந்துவிட்ட சம்பவம் இதுதான். இப்போது இருவர் மனதிலும் பற்பல உணர்வுக்கோலங்கள் திரையிட்டன.

கட்டிலில் சென்றுபடுத்த இந்திராவின் மனது ஆறவில்லை. எவ்வளவு படிச்சு பதவி வகித்தாலும்கூட பெண்கள் ஆண்களுக்கு சமைச்சுப்போட்டு உடுப்புத் தோய்ச்சு அவர்களுடை விருப்பத்துக் கெல்லாம் வளைஞ்சு கொடுத்து அடிமையாகத்தான் வாழவேண்டியிருக்கும். கடந்த வாரம் நடந்த கருத்தரங்கில் கூட இதை வலியுறுத்தினாங்கள். உண்மைதான்! குழந்தை வளர்ப்பு, சமையல், குடும்பத்தவருடைய இதர வேலைகள் சகலதையும் பெண்களே செய்யவேண்டியிருக்கும். இது அவருடைய கடமை என்றுதான் சுமத்திவைக்கப்பட்டிருக்கு. பழுக்களைச் சுமக்கிற பங்காளியாக வர யாரும் நினைக்கிறதில்லை. அன்பு, பாசம், கருணை என்ற திரைகளைப்போட்டு பெண்களுடைய சமத்துவத்தை நிராகரிக்கிற இந்த கேளியான சமூகத்தில் இருக்கிற ஆண்தானே இவரும்.

இந்திராவின் மனதில் புயல் அடித்தது. இடியிடித்துக் கண்களில் மாரி பொழிந்தது. அவனது கைவிரல்கள் பட்ட இடம் இன்னமும் கனமாக வலித்துக்கொண்டிருந்தது. இதேவேளை சுந்தரின் மனது சஞ்சலப்பட்டது. என்ன இருந்தாலும் நான் அடித்திருக்கக் கூடாது. பெருந்தன்மையும், பரந்தமனதும், பரஸ்பர விட்டுக்கொடுப்பும் இல்லாததனால் நிகழ்ந்துவிட்ட சண்டைக்காக இப்போது அவன் மனம் வருந்த ஆரம்பித்தான். மனதில் எழுந்த குற்ற உணர்வினால் தான் கடந்த சில வருடங்களாக அவன் அவளை தேற்றி சமாதானப்படுத்த முயன்று கொண்டிருக்கிறான்.

அவன் படும் அந்தரத்தையும், சமாதானப்படுத்த முயல்வதையும் அவன் புரிந்துகொண்டபோது அவளது எண்ண ஓட்டம் அவளது பக்கத்தில் இருந்த தவறுகளையும்கூட சிந்திக்க ஆரம்பித்தது. நானே இப்படியெல்லாம் வாதிட்டேன். உண்மையில் அவர் எவ்வளவு ஒத்தாசையாக இருக்கிறார். மற்ற ஆண்கள்போல் போலிக் கௌரவம் பார்க்காமல் நான் மோட்டார் சைக்கிள் ஓடும் போது கூட பின்னால் அமர்ந்திருந்து வருவாரே. தினமும் எனக்காக எவ்வளவு உதவிகளையும் விட்டுக்கொடுப்புக்களையும் செய்கிறார்.

அவளது எண்ண ஓட்டத்தை குழந்தையின் சினுங்கல் இடைநிறுத்தியது. குழந்தையை முதுகில் தட்டி உறங்க வைக்க முயன்றாள். எனினும் பெருங்குரல் எடுத்து அழ ஆரம்பிக்கவே தன்னுடன் அணைத்துப் பாலூட்டினாள்.

தாய்மையின் அரவணைப்பிலும், பசி

குழந்தையை உறங்கவைத்தாள்.

சுந்தரின் நடமாட்டத்தைக் காணவில்லை. எழுந்து வெளியே அவனைப் பார்க்க நினைத்தபோது கையில் இரண்டு கிளாஸ். ஜூஸ் கொண்டு அவன் வந்துகொண்டிருந்தான். தரிசிப்பின் தகரிப்பில் எச்சில் கூட்டி விழுங்கி தன்னை திடப்படுத்திக் கொண்டாள்.

'இந்திரா குடியம்மா'

காலையில் இருந்து வெறும் வயிறு தாங்காது. என்று அன்பாகக கூறியபடி நீட்டவே அவள் துரிதமாக எழுந்தாள். நன்றி. உங்களுக்கு ஏன் இந்த வேலை. என்று குரல் தளதளக்க சொல்லியபடி வாங்கினாள்.

அவனும் கட்டிலில் அமர்தபடி அவளையும் அமரவைத்தான். 'இதற்கு நீ நன்றி சொல்லுறதென்டால் தினமும் நான் உனக்கு எத்தனை தடவை நன்றி சொல்ல வேண்டியிருக்கும்' என்று சுந்தர் சிரித்தான்.

'சாப்பிட்டியளா அத்தான்?' அவளது குரலில் ஒலித்த மென்மை அவளுக்கே வியப்பை அளித்தது.

"இல்லை நீ சாப்பிடாமல் நான் சாப்பிட மனம்வரவில்லை. வலிக்குதாம்மா என்று அவளது கன்னத்தில் பதிந்திருந்த கைவிரல் அடையாளத்தில் முத்தமிட்டாள்.

சரி எழும்புங்கள் சாப்பிடுவம். நேரம் போனதே தெரியவில்லை. மூன்று மணியாகுது. அவள் எழுந்து சுறுசுறுப்பனாள். இதுவரை மனதில் இருந்த கோபம் எல்லாம் கரைந்து நிதானம் அடைந்திருந்தாள். சீ! எதற்கு இந்தக் கத்தல் கத்தினேன். இவரது மனதை அநாவசியமாக நோக வைத்துவிட்டேன்... என்று எண்ணிபடி உணவைப் பரிமாறினாள்.

நீயும் இரன்... சேர்ந்து சாப்பிடலாம். அவன் அன்போடு அழைத்தான். மூட்டம் கட்டியிருந்த வானம். மெல்ல மெல்ல தூறல் எடுத்தது.

அவனோடு அருகே அமர்ந்திருந்து சாப்பிடுகையில் அவனது நல்லியல்புகள் ஒவ்வொன்றாக மனதில் நிழலாடியது. அவனது நல்லியல்புகள் பெண்களை மதிக்கும் பண்புகள், அவள்மீது அவனுக்குள் கரிசனை என ஒவ்வொன்றாக நினைவுக்கு வர, அவனுடன் சற்று முன்னர் நடந்துகொண்ட முறைக்காக வருந்தினாள். அவனது மனதிலும் அப்படித்தான்.

இருண்டுகொண்டிருந்த வானம் சின்னச்சின்னத் தூறலாய் இறங்க ஆரம்பித்த பின் தென்றல் காற்று வீசியது. முகில்களை அந்தக் காற்று தொலை தூரம் கொண்டுசெல்லவே வானம் வெளுத்துக்கொண்டு வந்தது. தூறலும் படிப்படியாகக் குறைந்து, மறைந்து வானம் முழுதாய் வெழுத்தது.

பாகற்காய் கறி அற்புதம் என்றான் சுந்தரம். அது சரி பின்நேரம் உனக்கு பெண்கள் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் கருத்தரங்கு இருக்கின்றது அல்லவா? அவன் ஞாபகம் ஊட்டுகையில் இந்திரா சிரித்தாள். நான் போகவில்லை. ஏன்? இந்திரா அவனை அன்பாக நோக்கினாள். பின்நேரம் இருவரும் பீச்சுக்குப் போய்வருவோம்... ஒன்றாக வெளியே போய் ஆறுதலாகக் கதைச்சு நாளாச்சு... மனது பொங்க அவன் ஆழமாக அவளை நோக்கினான்.

சீ... போங்க...

போங்க என்பதன் பொருள் வாங்க என்று அவனுக்குத் தெரியும்.

# நூல் அகம்

நூலின் பெயர் : மௌன தரிசனங்கள்.
எழுதியவர் : வி.ஜெயபால்
முதற்பதிப்பு : 2004 சித்திரை.




மௌன தரிசனங்கள் என்னும் கவிதைத் தொகுதி வாசகர்களின் பார்வைக்குக் கிடைத்துள்ளது. எல்லாமாக முப்பத்தைந்து கவிதைகளைக் கொண்ட இந்தத் தொகுதி மிகவும் நேர்த்தியான அச்சமைப்பில் வெளியாகியுள்ளது. இந்தத் தொகுதியின் ஆசிரியரான வி.ஜெயபால் வளரத்துடிக்கும் ஓர் இளங் கவிஞர் என்பதற்குத் தொகுதியிலுள்ள கவிதைகளே சான்று.

பொதுவாகவே கவிஞன் எனப்படுபவனுக்கு அவன் வாழ்கின்ற சூழல் ஏற்புடையதொன்றாகத் தெரிவதில்லை. அது போலவே அவன் வாழ்கின்ற சூழலுக்குப் பொருத்தமுடைய ஒருவனாகச் சூழல் அவனைக் கருதுவதில்லை. சங்ககாலம் தொட்டு இன்று வரை பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுத்து வரும் கவிதையானது, சுவைஞர்களைச் சென்றடைவதிலேயே அதன் இருப்பை நிலைநிறுத்தி வருகிறது. பல்வேறு இலத்திரனியல் சாதனங்களின் பாவனை காரணமாக அச்சிடப்பட்ட நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கம் மக்களிடையே வெகுவாகக் குறைந்து வரும் இன்றைய காலகட்டத்தில், மௌன தரிசனங்கள் நூலுருவில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாம் வாழ்கின்ற உலகை நிறைவானதொன்றாகக் காணமுடியாத கவிஞர் உலகின் குறைகள் அனைத்தையும் இறைவனே நிறைவு செய்ய வேண்டுமெனத் தொகுதியிலுள்ள முதலாவது கவிதையான 'துதி' என்ற கவிதையால் மன்றாடுகின்றார்.

"மனித குலம் அத்தனையும்
மதித்ததை மதித்திடவும்
மறமற்ற அறவாட்சி
அமைதியில் மலர்ந்திடவும்
ஆண்டவனே அருள் தருக
அன்பரசை நிறுவிடுக"

இவ்வாறு இறைவனை மன்றாடும் கவிஞர் இயற்கையை ரசித்தல், இயற்கையைப் பாடுதல், இயற்கையிடம் பாடம் படித்தல், சொந்த அனுபவங்களைக் கூறுதல், புத்திமதி கூறுதல் எனப் பலதரப்பட்ட வெளிப்பாட்டு உத்தியைக் கையாண்டு, சொல்ல வந்த பொருளை வெளிப்படையாகச் சொல்கிறார். சொல்கின்ற விடயம், சொல்ல எடுத்துக் கொண்ட மொழிநடை என்பன ஒத்திசைந்து செல்வதனால் கவிதைகள் புரிந்து கொள்வதற்கு இலகுவாகவுள்ளன. நூலின் இறுதியிலுள்ள குட்டிக் கவிதைகள் நூலுக்கு மகுடம் வைத்தாற்போல் உள்ளன.

வளரும் கவிஞர் என்ற வகையில் வி.ஜெயபால் தனக்கு முற்பட்ட கவிஞர் பலரது கவிதைகளை வாசித்தறிந்துள்ளார், துறை சார்ந்த வழிகாட்டல்களைப் பெற்றுள்ளார் என்பன மௌன தரிசனங்கள் நூலினூடாகக் கண்டுகொள்ளக் கூடிய மற்றொரு செய்தியாகும். தகுதியானவர்களிடமிருந்து வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்வதென்பது மற்றைய இளங்கவிஞர்களுக்கு எடுத்துக் காட்டான ஒரு விடயமாகும்.

வி.ஜெயபாலின் முதலாவது தொகுதி மௌன தரிசனங்கள். இந்தத் தொகுதியிலுள்ள என் கவிதையின் பிறப்பு என்ற கவிதை

"கவிதை வரைந்தேன்
பிரசவ வேதனை எத்தனை?
பிறந்த பின்னும் சோதனை
அத்தனை"

எனத் தொடர்கிறது. இதுபோன்ற பல சோதனைகளையும், வேதனைகளையும் வென்று, மௌன தரிசனங்கள் என்ற நூலைச் சாதனையாக்கிய வி.ஜெயபாலனின் அனுபவங்கள் அவரது அடுத்த தொகுதிக்கான பசளையாகட்டும்.

- ஞா.மணிமேகலை-

# இலக்கிய முத்து

# அவளும் அன்னமும்

புன்னை மரத்தின் கீழ் ஓர் பாறையில் அமர்ந்திருக்கின்றாள் அபினயா. எங்கோ இருந்து காற்றில் அள்ளப்பட்டுவந்த துரும்பொன்று கடலில் வீழ்கின்றது. அதுவும் அபினயாவைப் போன்றதோ?

நேற்றுவரை தென்றலில் புஷ்பமாக அசைந்தாடிய அபினயா ஏன் இப்படி ஆனாள்? வானவில்லை வளைத்து வைத்தது போன்ற புருவங்கள், மையின்றிக் காணப்படுகின்றன. நேற்றுவரை பட்டாம் பூச்சிகளாக சிறகடித்த கண்கள் நீர் வடிக்கின்றன. அவளது உதடு மட்டும் எதையோ உச்சரிக்கின்றது. உதட்டின் ஒவ்வொரு உச்சரிப்பிலும் ஆன்மா துடிக்கின்றது. காரணம் அவளது ஜீவனை இன்னும் காணவில்லை அவன் தான் ஆருரன்.

வருடங்கள் ஒவ்வொன்றும் நிமிடங்களாக அவனருகில்உணர்ந்த அபினயா, இன்று நிமிடங்கள் வருடங்களாக நீண்டு செலவதாக உணர்கின்றாள்.

அபி; என்ன கோபம், தாபம் விஞ்சி நின்றாலும் அவளைக் கோபம் தடுக்கின்றது. அபி எனனைப் புரிந்துகொள்... அவள் முடிப்பதற்குள், நிறுத்துங்கள் என்றது அவளது ஊடற குரல். என்ன சொல்லப்போகின்றீர்கள், வழமையான பல்லவி தானே என்றாள் அபினயா. உனது முற்கோபம்தான் எனக்குப் பிடித்தது என்கின்றான் ஆருரன். சரி சரி சற்று அப்பால் நில்லுங்கள் என்கிறது அவளது அதிகாரக்குரல். அவள் எழுந்து அப்பாலே சென்று நிற்கின்றாள். அவனும் அவளை விடுவதாக இல்லை. சீ! கையை விடுங்கள் என உதறி விட்டு ஓடியவளது காலில் கடல்நீர்பட்ட போதுதான் உணர்வுகள் விழித்துக் கொண்டன.

எங்கே அவளைக் காணவில்லையே! அப்போ அவளை "அபி" எனச் செல்லமாக அழைத்தவன் யார்? அவளது கையினைப் பிடித்தவன் யார்? இவ்வளவும் நினைவுகள் என என்னும் போது அவளுக்கே வெட்கமாக இருந்தது. நினைவுகள் கூட இப்படி நீள்கின்றனவே எனத் தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

மீண்டும் நினைவுகள் கலைந்து நிஜத்தை உணர்ந்தாள் அவள். ஆருரன் அவன் ஏன் வரவில்லை. வருவாள் என்கின்றது மனது. அதே மனது வரமாட்டான் எனவும் மறுதலிக்கின்றது.

அவள் பின்னே சருகுகள் சலசலக்கும் ஓசை கேட்கின்றது. ஆருரன்தான் என எண்ணியவள் வரட்டும் இவருக்கும் நான் யாரெனக் காண்பிக்கின்றேன் எனக கண்களை, நிலத்தை நோக்கி ஏதும் பேசாது இருக்கின்றாள்.



அவளது பிடிவாதம் அவனைப் பார்க்காதே என மனதிற்குக் கடிவாளம் போடுகின்றது. சில நிமிடங்கள் நிசப்தமாய்க் கழிகின்றன. அவனாயின் இத்தனைக்கும் எத்தனையோ... என எண்ணியவள் எதையும் காணாததால் அவனல்ல என்று முடிவுடன் நிமிர்கின்றாள்.

வழமையாக ஆருரன் வரும் வரை அவளருகில வந்த மரும் அன்னப்பறவை முனனே நிற்கின்றது.

அதைப் பார்த்த அவளது கண்கள் கருக் கொண்ட மேகமாகின. அன்னமே என்னருகே வராதே! நீயும் ஒரு பெண் தானே. என் வேதனை அறிந்தும் ஏன் தனியே வந்தாய்? என் நெய்தல் நிலத்தலைவன் எங்கே? அவனைப் எதிர்பார்த்து இருக்கும் என் உடல்இழைத்து, வளையல்கள் கழன்று விழுகின்றன என என் துயரைத் தலைவனுக்கு உரையாது அருகில் வராதே! போ, நீ போ, இங்கு நிற்காதே என் துயரை என் தலைவனுக்குக் கூறு போ, போ எனப் புலம்புகின்றாள் அபினயா.

"அடையல் குருகே அடையலெங்கானல்
அடையல் குருகே அடையலெங்கானல்
உடை திரைநீர்ச் சேர்பற் குறுநோய் உரையாது
அடையல் குருகே அடையலெங்கானல"

(குறுந்தொகை)

- லெஸ்லி

1960 ஆம் ஆண்டுகளில் சி.சு.செல்லப்பா அவர்களின் எழுத்து சஞ்சிகையில் முருகையன் அவர்களால் எழுதப்பட்டு பிரசுரமான இந்தக் கட்டுரை பலவிடயங்களில் ஒரு காலப்பதிவாக இருப்பதால் இதனை இங்கு மீள் பிரசுரம் செய்கின்றோம்.

# விமர்சன நோக்கு

பொதுவாக, இலக்கிய விமர்சனம் செய்கிறேன் என்று கிளம்புவோரில் பெரும் பாலானவர்கள் அபிப்பிராயம் சொல்லுவதுடனே நின்று விடுகின்றார்கள். இலக்கிய விமர்சனம். அபிப்பிராயம் கூறுதல் என்பது இன்றைய தமிழ் விமர்சகர் பலரின் தவறான எண்ணம். இவர்கள் பெரு வெட்டான சில முடிவுகளை முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டு. ஏற்றால் ஏற்றுக்கொள். இல்லாவிட்டால் போ என்பது போன்ற மனோபாவம் காட்டிக் கொள்கிறார்கள்.

அபிப்பிராயம் கூறுவதுதான் இலக்கிய விமர்சனம் என்றால். அது தேவையில்லை. சொந்த விருப்பு. வெறுப்புக்கள். தன்நோக்குத் தன்மைகளிலிருந்து இயன்றவரையில் விலகி நின்று. ஒரு விஞ்ஞானமாகவே இலக்கிய விமர்சனம் இருக்கவேண்டும் என்று கொள்கையளவிலாவது ஒப்புக்கொள்ள வேண்டும். உணர்ச்சிமயமான பற்றுக்களோடு கலந்து. அவற்றின் பிடிப்பினாலே வழி நடத்தப்பட்டு. அந்த வழியிலே தீர்ப்புக் கூறுகிறவர்களால் என்ன பிரயோசனம்? அதுதான் இலக்கிய விமர்சனம் என்றால். 'எழுத்தை' உடனே நிறுத்திவிடுங்கள் என்றுதான் கூறுவேன். அபிப்பிராயம் என்றதுமே அது கூறுகிறவனின் பக்குவத்தைப் பொறுத்த ஒன்று. கூறுகிறவனின் பக்குவத்தை நிர்ணயிக்க வேண்டுமானால். ஒரு நியம பக்குவத்தை முன்வைத்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதாவது விமர்சனங்களை மதிப்பீடு செய்யவேண்டும். எனவே. ஒரு இலக்கியப் படைப்பை இருபது பேர் விமர்சித்தார்கள் என்றால். அந்த இருபது பேரையும் மதிப்பிட்டுப் பார்த்தாலொழிய அவ்விருபது பேரின் பக்குவத்தையும். நிர்ணயித்தாலொழிய அவர்கள் செய்த விமர்சனத்துக்கு எந்தவிதமான அர்த்தமும் இருக்காது. அந்த இருபது பேரையும் மதிப்பிடுவதனாலும். அந்த் மதிப்பீடும் இன்னொருவரின் அபிப்பிராயமாகத்தான் இருக்கும். அது ஓர் அபிப்பிராயமாகையில். அந்த அபிப்பிராயத்தைச் சொன்னவரை மதிப்பிட நேரிடும். ஆகையாலே நான் இலக்கிய விமர்சனம். இலக்கியம் பற்றிய ஆய்வாக இருக்காமல். விமர்சகர்கள் பற்றிய ஆய்வாக ஆகிவிடும். பிள்ளையார் பிடிக்கக் குரங்கானது போல். எங்கோ தொடங்கி எங்கோ முடிந்துவிட்டது. இதெல்லாம் ஏன்? விமர்சனம் செய்தல் அபிப்பிராயம் கூறுதல் என்பன பிழையான எண்ணத்தின் விளைவு.

இந்தச் சிக்கலில் இருந்து தப்புவது எவ்வாறு? இலக்கிய விமர்சனத்தை ஒரு விஞ்ஞானமாக்க வேண்டும். விஞ்ஞான ஆய்வுமுறைகளும். சட்ட திட்டங்களும் இருப்பது போலவே. விமர்சனத்துக்கும் ஒரு முறை வேண்டும். இவ்வாறான முறையை வகுத்துக்கொண்டு ஒரு கோட்பாட்டை அமைக்க வேண்டும். ஒவ்வொரு விமர்சகனும் ஏதோ ஓர் இலக்கிய விமர்சனக் கோட்பாட்டைச் சார்ந்து நின்றே தனது ஆய்வுகளைச் செய்து - இந்த ஆய்வுதான் விமர்சனத்தின் முக்கிய பகுதி - அவற்றின் விளைவான தீர்ப்பைக் கடைசியாகக் கூறவேண்டும்.

இந்தக் கோட்பாடுதான் என்ன? இலக்கியம் ஏதும் எப்படிப்பட்டது? அதன் நோக்கம் என்ன? அதன் தரத்தை மதிப்பிட்டுரைக்க அளவு கோல்கள் எவை? போன்ற கேள்விகளின் விடையைத் தர்க்கரீதியான கோவையாக வகுத்துக் கட்டியெழுப்பப்பட்டதோர் அமைப்பே இலக்கிய விமர்சனக் கோட்பாடு. ஒரு கோட்பாட்டை. உடையவர்களாக ஐந்து விமர்சகர்கள் இருந்தால் அந்த ஐந்து பேரும் ஒரு கோஷ்டியினர் என்று சொல்லலாம். அப்படியான எண்ண ஒருமிப்பு இல்லாவிட்டாலும்கூடப் பரவாயில்லை. ஒவ்வொரு விமர்சகனும். ஒவ்வொரு கோட்பாடு உள்ளவனாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால். நம்முடைய விமர்சகர்களுக்கோ அப்படிப்பட்ட கோட்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

பத்திரிகைத் தேவைக்காக ஏதோ தோன்றியதை எழுதி விட்டு. உதிரி உதிரியான கருத்துச் சிதறல்களைப் பெற்றுத்தள்ளுவதுதான் இவர்கள் செய்யும் பணி. இந்தச் சிதறல்களினூடே ஒரு ஒருமிப்போ. ஒழுங்கோ காணோம். அவைகள் இல்லை என்பதன் காரணம். இலக்கிய விமர்சனக் கோட்பாடு ஒன்று இல்லாததுதான். அளவுகோல் இல்லாமல் அளக்கத் தொடங்கியது போல. கோட்பாடு இல்லாமல் ஆய்வு செய்யத் தொடங்கிவிட்டோம். அதனாலே தான் முன்னுக்குப்பின் முரணான கூற்றுக்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஒரே விமர்சகரின் எழுத்தில் பொறுப்பற்ற முறையிலே அதிர்ச்சி தரும் ஆசையும். படிப்பவர்களைத் திணற வைக்கும் ஆர்வத்தில் தோன்றிய விஷமத்தனமும் சிலரது விமர்சனத்திலே தலைகாட்டுகின்றன.

ஒன்றைச் சொன்னால் அதைக் காரணகாரிய ரீதியாக நிறுவிக்காட்ட வேண்டும். அந்த விவகாரமே நம்மவர்களின் சிரத்தையே அதிகம் கவரவில்லை. இலக்கிய ரசனை அனுபவத்திற்கு அவரது முழுப்படிப்பும் உப யோகப் படாது போனதை. அவர் எழுத்தை விமர்சனம் செய்து. செய்து காட்ட முடியும் என்று கூறுகிற விமர்சகர் அவ்வாறு செய்து காட்டுவதுதானே அதைச்செய்து காட்டமாட்டார்கள். காட்டமுடியும் என்று சொல்லி அமர்ந்து விடுவார்கள்.

எமது விமர்சனத்தின் குறை கோட்பாடின்மை. அதன் விளைவான அறிகுறிகள்தான். எமது விமர்சகர்களிலே பலர் கையாளுகிற நடை. ஒரு நிச்சியமற்ற தெளிவின்மையும். குதிரையெனக் கொண்டாலும் குதிரையாய்க் குதிரை கெட்ட கழுதையெனக் கொண்டாலும் கழுதையாய்த் தோற்றமளிக்கும் போக்கும் கொண்டதாய் சுற்றிச் சுற்றிச் சுப்பரது கொல்லைக்குள்ளேயே சுழலுவதாக உள்ளதே இவர்களது நடையின் தனிச்சிறப்பெனலாம். கனம் காந்திரமான கருத்துக்களுக்குப் பொருத்தமான நறுக்கான சொற்கள் சுட்டிப்பாக விழுந்து உறுதியான தெளிவு பெற்றுத் தமிழாக அமைந்தால் தான் அது தமிழ் இலக்கிய விமர்சனமாக முடியும்.

இந்த விமர்சகர்களிலே சிலர் ஆங்கில இலக்கியத்தையும். ஆங்கில விமர்சனத்தையும் நன்றாகக் கரைத்துக் குடித்து. தலை கீழ்ப்பாடமாக ஒப்புவிக்கத்தக்க புலமையும் பெற்றவர்கள் நல்லதுதான். இவர்கள் தமிழ் இலக்கியத்தை விமர்சனம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு புறப்பட்டதுதான் ஆச்சரியப் படவேண்டிய விடயம். ஆங்கிலம் படித்ததை ஒரு குறையாகச சொல்லவரவில்லை. எமது ஆங்கில ஞானத்தை வெளிக்காட்ட வேண்டு மென்ற ஆர்வம் இவர்களைக் காட்டிக் கொடுக்கிறவிதம் தான் பரிதாபகர மானது. ஆங்கிலத்திலே சிந்தித்து தமிழிலே எழுதுகிறார்கள் சிலர். அவர்களது சிந்தனை இரவலாக இல்லாமல் சொந்தமாக இருந்து.

அதாவது உள்ளத்தில் உண்மை ஒளி இருந்து. அவர்கள் தமிழ் இலக்கிய விமர்சனம் செய்யப் புறப்பட்டவர்கள் என்ற முறையிலே தமிழர்களாகவும். இருந்து. நாலு வரி வாசித்து யோசிப்பவராகவும் இருந்தால் அவருக்குத் தமிழிலும் சிந்திக்கத் தெரியவேண்டும். ஆங்கிலத்தில் தான் யோசிப்பேன் என்று சொல்வார்களானால் அப்படியே செய்யட்டும். எழுதுவதும் ஆங்கிலமாக இருக்கட்டும். தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதி என்ன பயன் என்று யாராவது கேட்கக்கூடும். சரி. தமிழ் இலக்கியத்தைப் பற்றி வேண்டாம் ஆங்கில இலக்கியம் பற்றியே ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டு போகட்டுமே இந்த ஆங்கிலச் சிந்தனையாளர்கள்.

இன்னும் ஒரு சாரார் இலக்கிய விமர்சனத்தை ஒரு படைப்பு வேலையாக எண்ணி வருகிறார்கள். இவர்கள் இலக்கியங்கள் எமக்குத் தந்த மனப்பதிவுகளை வைத்துக்கொண்டு அதைச் சுற்றித் தாமாகவே இன்னொரு படைப்பை கட்டிஎழுப்புகின்றார்கள்.

சுருக்கமாகச் சொல்வதானால். இலக்கிய விமர்சனக் கோட்பாடின்மையும். அதன் விளைவான கருத்திறுக்கக் குறைவும். விமர்சனத்தை அபிப்பிராயமாகவும். படைப்புக் கலையாகவும் கருதுவதுமே எமது விமர்சன உலகத்து நோய்கள் எனலாம்.

- முருகையன்

நன்றி - எழுத்து.

சர்வதேச அரசியல்

- கே.ரி.கணேசலிங்கம்



செப்ரெம்பர் 11 தாக்குதல்

# அல்கொய்டாவின் அமெரிக்கா மீதான தாக்குதலும் ஜோர்ஜ் புஷ்ஷின் தேர்தலுக்கான தந்திரோபாயமும்...

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் புதிய வியூகங்களுடன் தயாராகின்றது. தேர்தல் களத்தில் நிற்கும் இரண்டு வேட்பாளர்களும் பிரசாரங்களை மிக வேகமாக அமெரிக்கா எங்கும் மேற்கொண்டு வருகின்றனர். புதிதாக களத்தில் குதித்துள்ள ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் ஹரி தற்போதைய ஜனாதிபதியும் குடியரசுக் கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷுக்கு பெரும் நெருக்கடி கொடுப்பவராக விளங்குகின்றார். அமெரிக்க மாநிலம் எங்கும் செல்வாக்குப் பெற்றுவரும் ஜோன் ஹரி ஆளுமைமிக்க, நேர்மையான, சமூக சேவையாளனாகக் காட்டப்படுகின்ற போக்கு, அமெரிக்க மக்களால் வரவேற்கப்படுகின்றதாக மாறிவருகின்றது. இதனை முறியடிக்க ஆளும் தரப்புப் போடும் வியூகங்களே இன்னொரு தடவை அமெரிக்க மக்களையும் உலகத்தையும் அமெரிக்கா பக்கம் நோக்கித் திசைதிருப்ப வைக்கும் போலுள்ளது. வில்லியம் புஷ் மீண்டும் ஜனாதிபதியாவதற்குப் போடும் திட்டத்தை விரிவாக நோக்குவோம்.

அமெரிக்க தேசம் ஆபத்தில் சிக்கியுள்ளது. அமெரிக்காவின் நிதி நிறுவனங்கள் மற்றும் அமெரிக்காவின் முக்கிய மூன்று நகரங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அபாயத்தை எதிர்கொள்வதற்காக அனைத்தையும் நாம் செய்துவருகிறோம். வொஷிங்ரன், நியூயோர்க் மற்றும் நெவார்க் நகரங்களில் பல கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு அல்கொய்டா தீவிரமாகத் திட்டமிடுவதில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்கிறார் அமெரிக்க ஜனாதிபதி புஷ். இதனோடு அவர் [illegible]விடவில்லை. நாட்டைப் பாதுகாக்கும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை என்று கூறியுள்ள புஷ் புலனாய்வுத் துறைகளை இணைக்கும் தேசியப் புலனாய்வுப் பணிப்பாளர் என்ற தகுதியை உருவாக்கும்படி கேட்டிருப்பதுடன், அமெரிக்க பாதுகாப்புத் துறைச் செயலாளர் ரம்ஸ்பீட் அது தொடர்பான பணியில் ஈடுபட்டு வருகின்றார். மிகத் தீவிரமாக அமெரிக்கா மீதான தாக்குதல் பீதியும் பரப்பப்பட்டு வருகின்றது.

அமெரிக்கா மீதான அல்கொய்டாவின் தாக்குதல்கள் பற்றிய தகவல்களை அமெரிக்காவின் உள்நாட்டுப் புலனாய்வுத் துறையும், சர்வதேச புலனாய்வுத் துறையும் இணைந்து வெளியிட்டுள்ளதுடன், அமெரிக்க மத்திய அரசு அதிகாரிகளும் நகராட்சி அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். அல்கொய்டாவின் தாக்குதல், தற்கொலை முயற்சியாக அமைவதுடன் வாகனங்களில் குண்டுகளைப் பொருத்தி அவற்றை மோதுவதன் வாயிலாக இந்தத் தாக்குதல்களைச் சாத்தியப்படுத்தப் போவதாக எச்சரித்துள்ளது.

அமெரிக்கா மீதோ அல்லது ஐரோப்பா மீதோ அல்கொய்டாவின் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை ஒன்றும் புதியதல்ல. அதுவொரு நீண்ட, கிரமமாக வெளிவரும் தகவல்கள்தான். அவ்வாறு அல்கொய்டாவும் அதன் தலைமையும் அடிக்கடி தாக்குதல் எச்சரிக்கை வழங்கும்போது தற்போதைய நிலையை மட்டும் ஏன் வில்லியம் புஷ் பெரிதுபடுத்துகின்றார் என்பதே சந்தேகத்துக்கான காரணம் ஆகும். நிச்சயமாக ஜனாதிபதி புதிய திட்டத்துடனேயே இந்த எச்சரிக்கையை முதன்மைப்படுத்தி வருகின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இரண்டாவது அமெரிக்க புலனாய்வுத் துறையின் நம்பகத் தன்மை எப்படியானது என்பது ஈராக் தாக்குதலின் பின்னர் நடந்த அரசியல் திருப்பங்களின் மூலம் தெளிவாகிவிட்டது. அப்படியான புலனாய்வுத் துறையால் முன்வைக்கப்படும் எச்சரிக்கையை முதன்மைப்படுத்தி ஜனாதிபதி செயற்படுகிறார் என்றால், இரு பிரிவுக்கும் இடையே படிமுறையான தந்திரமான வியூகம் ஒன்று வகுக்கப்பட்டுச் செயற்படுகின்றதென்பது புலனாகின்றது. இதனை யாரும் ஊகமாக எடைபோடவேண்டாம். செப்ரெம்பர் தாக்குதல் பற்றிய அறிக்கையைப் படித்துப் புரிந்தவர்களுக்கு இது இலகுவாகப் புரியும். இது பற்றிப் பிரெஞ்சின் நவ[illegible] கோட்பாட்டாளரான இழான் போத்ரிலார் கூறுவதைச் சற்றுக் கவனிப்போம்.

இவர் நிஜத்திற்கும் விம்பத்திற்குமான வேற்றுமைகளைக் காண்பது இந்தத் தகவல் தொழில்நுட்ப விம்ப யுகத்தில் இனி சாத்தியமில்லை என்பதைக் கடந்த இருபது ஆண்டுகளாகத் திட்டவட்டமாக நிறுவி வருகின்றார். அவர் பயங்கரவாதத்துக்கும் உலக மயமாக்கலுக்கும் நேரடியான உறவைக் காண்கிறார். அமெரிக்கா போரில் ஈடுபட்டாலும் அதனுடைய நோக்கம் வன்முறையான உலக மயமாதல் என்ற முடிவுக்கே வருகிறார். அதாவது - சாராம்சத்தில் போத்ரிலார் போலித் தகவல் யுகத்தில் தகவலூடே வரும் அம்சங்களை யதார்த்தம் எனக் கருதுபவர்கள் 21 ஆம் நூற்றாண்டில் அசல் முட்டாள்கள் என்ற முடிவுக்கே வருகின்றார். இந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கையை உற்றுநோக்குவோமாயின் இரண்டு பிரதான மாதிரிகள் தெரியவரும்.



புஷ்



ஹரி

ஒன்று - அடுத்த கட்ட ஜனாதிபதித் தேர்தலில் எப்படி புஷ் வெற்றிபெறுவதென்பதாகும். அதாவது அமெரிக்கத் தேசத்துக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டதென்ற தகவலால் ஜோன் ஹரியின் பிரசாரம் முறியடிக்கப்பட்டுவிடும் என புஷ் கருதுகின்றார். ஏனெனில் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஹரியைவிட புஷ்ஷே அவசியமானவரென அனேக அமெரிக்கர்கள் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

இதனால் பாதுகாப்பு அச்சுறுத்தலையும், இஸ்லாமிய அல்கொய்டாவின் நடவடிக்கையை வெறுக்கும் அமெரிக்கர்களுக்கு புஷ்ஷின் நடவடிக்கை சாதகமானதாக அமையும் என கருதுநிலை ஏற்படும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் நடந்த பிரித்தானியத் தேர்தலில் வின்சன் சேர்ச்சில் தான் அடைந்த தோல்வியை எப்படி ஊடகங்கள் முன் தந்திரசாலியாகக் காட்டிக்கொண்டு தப்பிக்கொண்டாரோ, அதேபோன்றே புஷ் நெருக்கடியில் இருந்து தப்பிக்கொள்வதற்கு - பாதுகாப்பைக் காரணமாக முன்நிறுத்தி நின்கின்றார். சேர்ச்சில் தோல்வியின் பின் சொன்ன வார்த்தைகள் -

சேர்ச்சில் - போரின்போது பிரித்தானி மக்களுக்கு தேவைப்பட்ட ஓர் ஆட்சியாளன். இன்று (இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்பு) போர் முடிந்துவிட்டது. அதனால் சேர்ச்சில் என்ற ஆட்சியாளன் பிரித்தானிய மக்களுக்குத் தேவையற்றவனாகிவிட்டான்.

இதனைப் புரிந்துகொண்ட புஷ் போருக்கான அல்லது பாதுகாப்புக்கான நெருக்கடிக் காலத்தை அமெரிக்க மக்களுக்கு நன்கு உணர்த்தி அப்படியான பாதுகாப்பு அச்சுறுத்தல் காலத்தில் புஷ் போன்ற ஆட்சியாளனே அமெரிக்காவுக்கு அவசியம் என்பதுபோல் காட்டிக்கொள்ள முயலுகின்றார்.

இதற்காகவே, அவர் அல்கொய்டாவின் அச்சுறுத்தலைப் புதிய பிரசாரச் சக்தியாக வெளியிட்டு வருகின்றார். வெளிப்படையாக ஒரு ஜனாதிபதி அமெரிக்க தேசம் ஆபத்தில் சிக்கியுள்ளதென்று கூறுவதாயின் அவரது ஆட்சிக் காலத்தில் என்ன செய்தார் என்பதே கேள்வியாகவுள்ளது. எதிர்க்கட்சி வேட்பாளர் முன்வைக்கும் தேர்தல் பிரசாரம் போன்றல்லவா விளங்குகின்றது. பின்தங்கிய நாடுகளின் ஆட்சியாளர்கள்கூட அவ்வாறான பிரசாரங்களை வெளியிடமாட்டார்கள்.

ஜனாதிபதி புஷ் அமெரிக்க ஜனநாயகத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி முதலாவது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதை மறந்துவிடமுடியாது. ஜனநாயகத்தின் ஓட்டைகளை அதிகம் பயன்படுத்தும் பக்குவமும் தந்திரமும் கொண்டவர் புஷ் என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியம். அவ்வாறே மீண்டும் சில வாரங்களுக்கு சில உபாயங்களுக்கு வழி வகுத்துள்ள நிலையையே காணக்கூடியதாகவுள்ளது.

இரண்டாவது எதிரணி வேட்பாளர் முன்வைத்துவரும் தேர்தல் பிரசாரத்தில் அமெரிக்கப் பொருளாதாரம் பற்றி அதிகம் கவனம் செலுத்துகின்றார். உள்நாட்டுப் பொருளாதாரம், உற்பத்தி, வேலைவாய்ப்பு என அபிவிருத்தியை சர்வதேச மட்டத்தில் அமெரிக்க நலனைப் பாதுகாக்கும் வெளிநாட்டுக் கொள்கையையுமே இலக்காகக் கொண்டு செயற்படுகின்றார். அமெரிக்கப் போர் வீரர்களின் அபுகிராய் சித்திரவதை போன்று ஆப்கானிஸ்தான், யூகோஸ்லாவியா, ஈராக் என்பனவற்றில் நிகழ்ந்தவற்றை வெளிக்கொண்டுவந்ததில் அதிக பங்கெடுத்ததுடன் ஜோன் ஹரி போருக்குள் அமெரிக்காவை உட்படுத்தியது தவறென தனது கருத்துக்களைப் பரப்பி வருகின்றார். இதனால் வில்லியம் புஷ்ஷின் அடிப்படைத் தேர்தல் வியூகம் தகர்ந்துகொண்டு செல்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜோன் ஹரியின் செல்வாக்குப் பெருகுவதுடன் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த அவரது கொள்கைகளுக்கு அமெரிக்க மக்கள் மத்தியில் அதிக வரவேற்பும் காணப்படுகிறது. அமெரிக்காவின் இந்த அணுகுமுறையால் ஏற்படப்போகும் ஆட்சி மாற்றத்தை எதிர்கொள்ள முடியாத ஜனாதிபதி புஷ், மாற்றீடாக ஏற்படுத்திக்கொண்ட புதிய உபாயமே பயங்கரவாதம் பற்றிய அச்சுறுத்தலாகும்.



வெள்ளைமாளிகை யாருக்கு?

பொருளாதாரத்தை உலகளாவிய அடிப்படையில் திட்டமிடும்போது வன்முறையைப் பிரயோகிக்க முயன்றது போல் அமெரிக்க பொருளாதார அபிவிருத்தி பற்றிய ஹரியின் சிந்தனையை முற்றாகத் தகர்க்க புஷ் போட்ட திட்டமே அமெரிக்க தேசத்தின் பாதுகாப்புக் கொள்கையாகும். உலகத்தைப் பிடிக்கப் போட்ட திட்டம் போன்றே அமெரிக்காவின் அடுத்த ஆட்சியைப் பிடிக்க புஷ் திட்டமிடுகின்றார்.

ஈராக்கின் அமெரிக்கப் படைகளுக்கு ஏற்பட்டுவரும் தொடர்நெருக்கடி மற்றும் அதனாலும் ஏனைய திட்டமிடலாலும் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுவரும் அபாயமும் புஷ்ஷின் வெற்றியைப் பாதிப்பவையாக அமைகின்றன. இது உள்ளூரில் மட்டுமல்ல வெளியூரிலும் காணப்படும் பொதுவான அபிப்பிராயமாகும். அதனை நோக்கும்போது புஷ் ஏதாவது புதிதாகச் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உண்மையிலேயே செப்ரெம்பர் தாக்குதலுக்கு புஷ்ஷின் நிர்வாகமே காரணம் என்ற கருத்து, சென்ற செப்ரெம்பர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலனாய்வுத் துறைகளும், பாதுகாப்புத் துறைகளும் மேற்கொண்ட நடவடிக்கையின் பலவீனத்தினாலேயே தாக்குதல் சக்திகள் இலகுவாகத் தப்பிக்கமுடிந்ததென்றும், அதன்மூலமே தாக்குதல் சாத்தியப்பட்டதாகவும் அந்த அறிக்கை குற்றஞ்சாட்டுகின்றது. முன்னாள் ஜனாதிபதிகளோடு ஒப்பிடும்போது பதவியையும் அதிகாரத்தையும் கைவிடத்தயங்கும் ஜனாதிபதியாகவே புஷ் காணப்படுகின்றார். உண்மையிலேயே ஈராக் தாக்குதல் தவறான ஆதாரத்துடன் தொடக்கப்பட்ட செய்தி வெளிவந்தபோது புஷ் பதவியை விட்டு இறங்கியிருக்க வேண்டும். வறிய நாடுகளின் அரசியல் கலாசாரத்திற்கு ஒப்பான அரசியல் கலாசாரத்தை ஜனாதிபதி புஷ் அமெரிக்காவை வளர்த்துச் செல்கின்றார். தவறான அணுகுமுறைக்கூடாக பதவிக்கு வந்தமை, ஆதாரமின்றிப் போர் தொடுத்தமை, ஈராக் ஜனாதிபதியைத் தலைவராக ஏற்றுக்கொள்ளாது நடந்துகொண்டமை, பொய்யையே உரைக்கும் ஜனாதிபதி எனப் பெயரெடுத்தமை, வாரிசு அரசியலுக்கு வழிவகுத்தமை என ஏகப்பட்ட அரசியல் கலாசாரத்தை மேற்கொண்டிருக்கின்றார். அமெரிக்காவில் இவ்வாறு எந்த ஜனாதிபதியும் இருந்ததில்லை என, முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிகாட்டர் குறிப்பிட்ட விமர்சனமே பொருத்தமானது போல் தெரிகின்றது

தீவிர தேர்தல் பிரசாரத்தில் தனது குடும்பத்துடன் ஈடுபட்டுவரும் புஷ் அமெரிக்கப் பொருளாதாரத்திற்காகவும், உள்நாட்டு அபிவிருத்தி பற்றியும் எந்தவிதக் கொள்கையையும் தெளிவாகக் கொண்டிராதவராக விளங்குகின்றார். அண்மையில் ஓகியோ மாநிலத்துக்கு தேர்தல் பிரசாரத்துக்காக சென்ற புஷ், அமெரிக்கப் பொருளாதாரம் மலருகின்றது. ஆனால், ஓகியோ மாநிலம் வளரவில்லை என்று கூறியிருந்தார். ஆனால், அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஓகியோ மாநிலத்தின் பொருளாதாரமும் ஒன்று என்ற வகையில் புஷ்ஷின் நடவடிக்கை இருக்கவில்லையென்பது கவனிக்கப்படவேண்டியது.

ஓகியோவில் புஷ் அதிகமாகப் பேசியது அல்கொய்டாவின் தாக்குதல் இலக்குப் பற்றியதாகவே இருந்தது என ஊடகங்கள் தெளிவுபடுத்தியுள்ளது. அமெரிக்காவை ஆபத்தில் இருந்து காக்கும் தூதுவன் தான் என்பது போலவே புஷ்ஷின் உரைகள் அமைந்துவருகின்றது என ஊடகங்கள் சாடுகின்றன.

எனவே, புஷ் கருதுவதுபோல்தான் அல்கொய்டா இருக்கின்றது என்பது அமெரிக்கர்களுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே தெரிந்த விடயம். அல்கொய்டாவின் தாக்குதல் அச்சுறுத்தல் எப்போதும் அமெரிக்காவிற்கு இருந்துவந்தது. அதனைப் பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்ட அல்கொய்டா தீவிரவாதியிடம் இருந்துதான் புலனாய்வுத் துறைகள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. அதனை அமெரிக்காவின் ஜனாதிபதி பெரிதுபடுத்தி பிரசாரமும் செய்யவேண்டியதில்லை. ஆனால், ஜனாதிபதி புஷ் அவற்றையெல்லாம் தேசத்தின் அச்சுறுத்தலாக அமையும் என்ற விநோதமான பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது தனது இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக் காலத்தை இலக்கு வைத்தேயாகும். அல்கொய்டாவுக்கு அமெரிக்கா இலக்கென்றால் புஷ்ஷுக்கு ஜனாதிபதிப் பதவி இலக்காகவுள்ளது. போலி யதார்த்தவாதிகளின் சிந்தனைக்குள் சிக்கியுள்ள உலகம் - போலிகளையே யதார்த்தம் எனக் கருதுகிறது. ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

திருக்குறள்

# நமது நோக்கு

## தூரத்துப்பச்சையாகும் சமாதானமுயற்சிகள்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கிலான - தற்போது தொடரப்படாது இடையில் நின்று போயுள்ள - அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துதவுமாறு அமைதி முயற்சிகளுக்கு அனுசரணையாளராகப் பணியாற்றி வரும் நோர்வே அரசுக்கு, ஜனாதிபதி விடுத்துள்ள அவசர அழைப்புக்கு இன்னமும் சாதகமான பதில் எதுவும் அந்த நாட்டு அரச தரப்பிடமிருந்து கிடைக்கவில்லை.

ஜனாதிபதியின் அந்த அவசர அழைப்புக்கான விபரங்கள் அடங்கிய கடிதத்துடன் இலங்கைக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஒஸ்லோ பயணமாகியுள்ளார் என்ற செய்தி வெளியானது முதல், மீண்டும் விரைவில் சமாதானப பேச்சுக்கள் தொடங்கிவிடும் என்ற அரசதரப்பு ஊடகங்களின் செய்திகளும், அமைச்சர்கள் விடுக்கும் சுயாதீனமான அறிக்கைகளும் பெருமளவில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இரண்டு வாரங்களின் முன்னர்தான் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக கடந்த பல மாதங்களாக ஒஸ்லோவுக்கும் - கொழும்புக்கும் - வன்னிக்குமிடையே பல தடவைகள் அலைந்தலைந்து சலிப்பும், களைப்புமுற்ற நிலையில சமாதான முயற்சிகளை இழுத்தடித்து குழப்பத்தை ஏற்படுத்த முனையும் சக்திகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் 'நெருப்புடன் விளையாட வேண்டாம்'என்று வெளிப்படையாக கடுப்புடன் அறிவித்துக் கொண்டே இலங்கைக்கு வந்து அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் பேசிவிட்டுப் பலனெதுவும் கிடைக்காத நிலையில் திரும்பினார் என்பது தெரிந்த விடயமே.

விடுதலைப்புலிகள் இந்தச் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கத் தொடங்கிய காலம் முதலே அது தொடர்பான நோர்வேயின் சகல நகர்வுகளிலும் மிகவும் உறுதியானதும், தெளிவானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான கொள்கை நிலைப்பாட்டுடன் முழுமையான ஒத்துழைப்பினை பல்வேறுபட்ட அரசதரப்புச் சீண்டல்களுக்கு மத்தியிலும் பொறுமையுடன் வழங்கி வந்துள்ளனர் என்பதை சர்வதேச சமூகம் தெளிவாக உணர்ந்து கொண்டேயுள்ளது.

ஆனால், இலங்கை அரசின் பக்கமான சமாதான முயற்சிகள் குறித்த ஒத்துழைப்பு என்பது உறுதியற்றதும், காலம் கடத்த ஏமாற்றும் மூலோபாயங்களை உள்ளடக்கியதும், நம்பகத் தன்மையற்றதுமாகவே இன்று வரை தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளின் முன்னர் போர்க்களத்தில் வரலாறு காணாத - இழப்புக்களையும் தோல்விகளையும் கண்ட நிலையில், தென்பகுதி மக்களின் வெறுப்பையும் கோபத்தையும் எதிகொள்ள வேண்டிய நிலையில் இருந்த ஜனாதிபதி தலைமையிலான அப்போதய பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து - பதவிக்கு வந்த ரணில தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகள் தாமாக முன்வந்து, சமாதான சமிக்ஞையை மேற்கொண்ட யுத்தநிறுத்தத்தை ஏற்றுக்கொண்டு, அமைதிப் பேசசுக்களை நோர்வே நாட்டின் அனுசரணையுடன் ஆரம்பிக்க முன்வந்து, புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்ட நாள்முதலே ஜனாதிபதியும் அவரின் தற்போதைய கூட்டணித் தோழர்களும், ஏனைய பேரினவாத உதிரிக்கட்சிகளும், அமைப்புக்களும் - அதனை முழுமையாக எதிர்த்தே வந்துள்ளனர் என்பது உலகறிந்த கசப்பான உண்மையாகும்.

கட்டம் கட்டமாக ஒன்றரை ஆண்டுகாலம் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பான கருத்தியல் முரண்பாடுகளுக்கு மத்தியில் முன்னேறிய சமாதான முன்னெடுப்பு நகர்வுகள் தேக்கநிலையை எட்ட அரசின் சமாதானம் மீதான நழுவல் - இரட்டை நோக்குத் தன்மை கொண்ட - அணுகு முறைகளே காரணமாகும். அத்துடன், ஜனாதிபதி தரப்பிலும் அப்போதைய எதிர்க்கட்சிகள் தரப்பிலும் சமாதான முயற்சிகளுக்கான ஆதரவைப் பெறுவதில் அப்போதைய பிரதமர் ரணில் தோல்வியையே கண்டிருந்தார்.

மேலே குறிப்பிட்டதைப் போன்று பதவியாசை கொண்ட அதிகார பலமிக்க ஜனாதிபதியுடன் அணிதிரண்டிருந்த சிங்களப் பேரினவாதிகள் சமாதான முயற்சிகளை குழப்ப எடுத்த எதிர் நடவடிககைகள், அமைதி முயற்சிகள் இடைநிறுத்தப்படக் காரணமுமாயின.

ஐ.தே.க முன்னணி அரசினை எந்தவிதமான நியாயபூர்வமான காரணமுமின்றி சர்வாதிகாரப் போக்கில் ஜனாதிபதி கலைத்தமையானது இதில் முக்கியமானதாகும். உண்மையில் இது சமாதானத்தைத் தகர்க்க இலக்கு வைத்து மேற்கொண்ட முதற் பாரிய நடவடிக்கையேயாகும்.

இப்போது அதே சமாதான எதிர்ப்பு அணி தான் சமாதான முயற்சிகளுக்கு ஆர்வப்படுவதாக காட்டிக் கொள்கிறார்கள் எனபதை கவனத்தில் கொள்வது அவசியம்.

ஏற்கனவே இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்து பேசுவதன் மூலமே பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்க முடியும் என்ற நிலையில் அது தொடர்பாக மாறிமாறி குத்துக்கரணம் அடித்துவரும் ஜனாதிபதியும், அரச தரப்பினரும் இன்றும் ஒரு உறுதியான முடிவுக்கு வரவில்லை என்பது தெளிவாக இருக்கையில் - எந்தத் தளத்தில் நின்று அரசு பேசத தயார் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்காமல் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் அர்த்தமேதும் இருக்கப் போவதில்லை.

இதற்கிடையே இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த விடுதலைப்புலிகளின் இறுக்கமான நிலைப்பாடு குறித்து எதனையும் தெரிவிக்காத நிலையில் - ஜனாதிபதி அதற்கு மாற்றீடாக மற்றுமொரு வகையிலான இடைக்கால நிர்வாக அலகு குறித்த வரைபொன்றினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆக... அடுத்த கட்ட குழப்ப நடவடிக்கைக்கான தயார்ப்படுத்தலில் அரசும், ஜனாதிபதியும் இறங்கியுள்ளனர் போல் தெரிகிறது.

இந்த நிலையில் சமாதானம் நிரந்தரமாக தூரத்துப் பச்சையாக இருக்கும் சாத்தியமே அதிகமாகி வருகிறதெனலாம்.

# நாடும் நடப்பும்



செய்தி:- அமெரிக்க படைத்தரப்பு அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்வது குறித்து இந்தியா உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறது.

## எதிர்வரும் நவம்பர் மாதமளவில் தேர்தல் வரவு - செலவுத்திட்டம்

அடுத்த நவம்பர் மாதத்தில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள அரசின் வரவு - செலவுத்திட்ட அறிக்கையை தேர்தல் வரவு செலவுத்திட்ட அறிக்கையாகத் தயாரிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக, ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, பொது மக்களின் வாழ்க்கைச் செலவை முடிந்தளவு குறைப்பதற்கும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை மேலும் அதிகரிப்பதற்கும், புதிதாக வரிச்சுமையைச் சுமத்தாமல் இருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கான உச்ச சம்பள உயர்வை இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு தேர்தலை இலக்காக வைத்துக்கொண்டு மக்களைக் கவரும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருப்பது, தற்போதுள்ள சிக்கலோடு கூடிய அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது போய்விடின் மீண்டும் திடீர்த் தேர்தலொன்றுக்குச் செல்லும் நோக்கத்துடனேயே என்றும் தெரியவருகிறது.(தே)

## சபாநாயகர் பதவியை பெற்றுக்கொள்ளுமாறு ஜாதிக ஹெல உறுமயவுக்கு அழைப்பு

சபாநாயகர் ஜே.எம். லொக்குபண்டாரவை அந்தப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு, ஹெல உறுமயவின் தேரர் ஒருவரை அந்தப்பதவிக்கு நியமிக்குமாறு - அரசின் பிரதிநிதிகள் அத்துரலியரத்தின தேரரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமது இந்த வேண்டுகோளுக்கு ஹெல உறுமயவிடமிருந்து நல்ல பதில் கிடைத்துள்ளதாகவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அநுராபண்டார நாயக்கா, மேவின் சில்வா, மங்கள சமரவீர ஆகிய அமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தும் அத்துரலிய ரத்தின தேரர் சபாநாயகர் பதவியை அரசுடன் இணைப்பதற்கு விருப்பத்தைக் காண்பிக்காத உடுவே தம்மாலோக தேரருக்கு வழங்கும்படி ஆலோசனை கூறியுள்ளார்.

அரசுக்கு ஆதரவு வழங்குவதானால் தர்மராஜ்ஜிய கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும்படி ரத்தின தேரர் விடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்த அரச பிரதிநிதிகள், அதற்குப் பதிலாக எல்லாவல மெத்தானந்த தேரருக்கு புத்தசாசன அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (தே)

## வேலணைப் பிரதேசத்துக்கு வலுக்குறைந்த மின்சாரம்

இலங்கை மின்சாரசபையினால் வேலணை மேற்கு, புளியங்கூடல் போன்ற பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் மிகவும் வலுக்குறைந்ததாகக் காணப்படுகிறது.

இந்தப் பகுதிக்கு பகுதிநேரமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருவதுடன், இரவு வேளைகளில் மின்வெட்டும் மேற்கொள்ளப்படுகிறது.

இதனால், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது குறித்து பல தடவை மின்சாரசபைக்குத் தெரிவித்தும், மின்சாரசபையினர் அசமந்தமாக இருப்பதாகவும் மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்தனர். (99)

## குடத்தனைக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(வடமராட்சி)

குடத்தனை, அம்பன் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கையில் இலங்கை மின்சாரசபை ஈடுபட்டுள்ளது.

இதற்கான மின் கம்பங்கள் பறிக்கப்பட்டு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வல்லிபுரக்கோவிலிருந்து அம்பன் வீதி வரை - மின்சாரசபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

வல்லிபுரத்தில் உள்ள மின் பிறப்பாக்கியிலிருந்து முதலில் குடத்தனை, அம்பன் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு, பின் குடத்தனை வடக்கு, பொற்பதி, மணற்காடு ஆகிய கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனராம்

மட்டக்களப்பு பிரதேச இராணுவ உளவுப்பிரிவு அங்கத்தவர்கள் உட்பட ஏனைய உளவுப்பிரிவு அங்கத்தவர்களையும் கொல்வதற்குத் தேவையான விபரங்களைத் திரட்டுவதற்காக, விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவு அங்கத்தவர்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக இராணுவ உளவுப்பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் உளவுப்பரிவுத் தலைவர் ரமணனின் ஆலோசனையின் பெயரிலேயே இவர்கள் அங்கு சென்று இராணுவ உளவுப் பிரிவு தொடர்பான தகவல்களைத் திரட்டி வருகின்றனர்.

இவர்கள் குழுவாகவும், தனியாகவும் சென்று உளவுபார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு தமது இலக்குக் குட்பட்ட இராணுவ உளவுப்பரிவு அதிகாரிகளின் பாதுகாப்பு, உணவு, போக்குவரத்து ஆகியவற்றை விசேடமாக அவதானிக்கின்றனர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள புலி உறுப்பினர்களின் விபரங்கள் இராணுவ உளவுப் பிரிவினருக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (தே)

### இலங்கை சமாதான முயற்சிக்கு ஆதரவாக

## கனேடிய நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கத் தீர்மானம்

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை கனேடிய நடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அந்த நாட்டு பிரதி தகவல் அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

அண்மையில் கனடாவுக்கு விஜயம் செய்திருந்த நடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு கனடா ஒன்ராரியோவில் நடைபெற்றது. (தே)

### மந்திகை வைத்தியசாலையில்

## மேற்பார்வையாளர் பதவிக்கான ஆளணி அதிகரிக்கப்பட்டுள்ளது

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மேற்பார்வையாளர் பதவிக்கு ஆளணி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பேர் கொண்ட ஆளணி நான்காக அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் மேற்ப்பார்வையாளராகப் பணியாற்றிய எஸ்.இராமச்சந்திரன் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

புதிய ஆளணியின் பிரகாரம் நான்கு மேற்பார்வையாளர்கள் கடமையாற்ற வேண்டிய இந்த வைத்தியசாலையில், தற்போது மூன்று மேற்பார்வையாளர்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## வன்னி தொழில்நுட்பக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் சில காட்சிகள்













## சுற்றயல் கூறு மருத்துவமனைகளில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது

சுற்றயல்கூறு மருத்துவமனைகள் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக, மத்திய மருந்தக் நிலையிலேயே தற்போது இயங்குகின்றது என அக்கராயன் சுற்றயல்கூறு மருத்துவ மனைப் பொறுப்பதிகாரி ந.நந்தகுமாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - எமது மருத்துவமனையில் 21 பணியாளர்கள் தேவைப்படுகின்றபோது, தற்போது 14 பணியாளர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதனால் குறைந்த பணியாளர்களைக் கொண்டு, கூடிய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால், பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எமது வைத்தியசாலையில் நாள் ஒன்றுக்கு 150 மேற்பட்ட நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் மேலதிக சிகிச்சை தேவைப்படுபவர்களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புகின்றோம்.

இதேவேளை கிளிநொச்சி பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டு இருந்தபோது அக்கராயன் மருத்துவமனையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## நிறுத்தலளவைகளுக்கு முத்திரையிடல்

ஸ்கந்தபுரம் பகுதியிலுள்ள வியாபார நிலையங்களில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு நேற்று முதல் ஸ்கந்தபுரம் நிறுத்தலளவைப் பிரிவு செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்ந்து 15ஆம் திகதி வரை நடைபெறுமென,வருவாய்ப் பகுதியின் நிறுத்தலளவைப் பிரிவினர் தெரிவித்தனர்.

## சிறுமி மரணம்

கடந்த புதன்கிழமை மாலை நேரம் வீட்டில் பலாப்பழம் உண்ட பின், படுக்கைக்குச் சென்ற சிறுமி இரவு வயிற்றுவலி ஏற்பட்டு, தருமபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சிகிச்சை பலன் அளிககாமையால் மரணமானார்.

(முள்ளியான் கேவில் கிராமத்தைச்சேர்ந்த சுகீர்த்தனா சுசீந்திரராசா (வயது 7) என்னும் சிறுமியே மரணமானவராவர்.

## ஒட்டுசுட்டான் பகுதியில்

## மிதிவெடிகளில் சிக்கியதில் 11 பேர் கால்களை இழந்தனர்

### புள்ளிவிபரங்கள் மூலம் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் இராணுவத்தினர் ஆக்கிரமித்த போது, அவர்கள் புதைத்துவைத்த மிதிவெடிகளில் சிக்கி 11 பேர் தமது கால்களை இழந்துள்ளனர் என புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

அந்தப் புள்ளிவிபரத்தில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது -

வெடிபொருட்கள் வெடித்ததன் காரணமாக 4 பேர் தமது கண் பார்வையை இழந்துள்ளதுடன், 2 பேர் தமது கால்களையும் இழந்துள்ளனர். இதனைவிட பலர் வெடி பொருட்கள் வெடித்ததன் காரணமாகப் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை ஒட்டுசுட்டான் பகுதியில் 15 பேர் போலியோ நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா வடக்குப் பகுதியில் 3660 குடும்பங்கள் குடியமர்வு

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால போர் நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து, பல்வேறு இடங்களில் குடியமர்ந்து 4500 இற்கு மேற்பட்ட குடும்பங்களில், தற்போது 3660 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்த மக்கள் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஜயசிக்குறு படை நடவடிக்கையின் போது, இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களாவர். இவர்களில் 2783 பேருக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. மிகுதி 900 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு மீளக்குடியமர்ந்த மக்கள் எந்தவித அடிப்படைவசதிகள் அற்ற நிலையில் மிகவும் கஷ்ரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ர)

## மடு செல்லும் வாகனங்களுக்கு சகல ஆவணங்களும் அவசியம் !

### படைத்தரப்பு அறிவிப்பு

மடு தேவாலயத் திருவிழாவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள், மடு வீதிச் சந்தியிலுள்ள சோதனை நிலையங்களில் சோதனைக்குட்படுத்தப்படுமென்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, சாரதிகள் தேவையான ஆவணங்களை எடுத்துச் சென்று, சோதனைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

வாகனத்தின் பதிவுப் புத்தகம், வருடாந்த இறைவரி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகனத்துக்கானதகுதிகாண் சான்றிதழ், அரசாங்க வாகனமானால் எடுத்துச் செல்வதற்குத் திணைக்களத் தலைவரிடம்பெற்ற சான்றுக்கடிதம் என்பவற்றைச் சோதனையின் போது காண்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி மடு உற்சவம் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட தமிழ்த்தின போட்டி முடிவுகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வருமாறு,

***பேச்சு***

**பிரிவு I**

1ஆம் இடம் சி.கஜனா மகாஜனாக் கல்லூரி

2ஆம் இடம் சி.ரூபகனன் மீசாலை வீரசிங்கம் ம.வி.

3ஆம் இடம் ச.திலக்ஷன் இந்து ஆரம்ப பாடசாலை

**பிரிவு II**

1ஆம் இடம் ம.ரொசீன்மெலானி இளவாலை கன்னியர்மடம்

2ஆம் இடம் கி.லச்சிகா சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

3ஆம் இடம் ஜெ.சுலக்ஷன் தொண்டமனாறு விரகத்திப்பிள்ளை ம.வி.

**பிரிவு III**

1ஆம் இடம் சி.சோபிதன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

2ஆம் இடம் பா.மதுரா மெதடிஸ் பெ.உ.பாடசாலை.

3ஆம் இடம் ப.உபேந்திரா யாழ். மத்திய கல்லூரி

**பிரிவு IV**

1ஆம் இடம் த.பிரதீபன் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி

2ஆம் இடம் வ.பிரதீப் சிவப்பிரகாசம் வித்தியாலயம்

3ஆம் இடம் அ.யஸ்தினி அல்லைப்பிட்டி பராசக்தி வி.

**பிரிவு V**

1ஆம் இடம் தெ.ஹர்சன் யாழ்.மத்திய கல்லூரி

2ஆம் இடம் தெ.செந்தூரன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

3ஆம் இடம் ஞா.போல்அன்ரன் இணுவில் இந்துக்கல்லூரி

***பாவோதல்***

**பிரிவு I**

1ஆம் இடம் து.லோகன் கரவெட்டி மாணிக்கவாசகர் வி.

2ஆம் இடம் ஞா.கலைச்செல்வி யாழ்.ரன் கல்லூரி

3ஆம் இடம் யோ.நிதூஷியா ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா.

**பிரிவு II**

1ஆம் இடம் கா.சர்மினா வட்டு மத்திய கல்லூரி

2ஆம் இடம் ப.நிலாஜினி மீசாலை வீரசிங்க ம.வி.

3ஆம் இடம் பொ.ஜெயகௌரி வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி

**பிரிவு III**

1ஆம் இடம் தீ.சேந்தன் யாழ்ப்பாணக்கல்லூரி

2ஆம் இடம் செ.வினுஜா சாவகச்சேரி இந்துக்கல்லூரி

3ஆம் இடம் வி.அனஸீடா பொலிகண்டி இ.த.க.பா.

**பிரிவு IV**

1ஆம் இடம் ஜெ.வைஸ்ணவி மானிப்பாய் மெமோறியல் பாடசாலை.

2ஆம் இடம் பா.கஜலக்சன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

3ஆம் இடம் ப.பாரதி வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி

**பிரிவு V**

1ஆம் இடம் கி.சசீவன் சென்.ஜோன் கல்லூரி

2ஆம் இடம் சி.அபிராமி மெதடிஸ் பெ.உ.பாடசாலை.

3ஆம் இடம் தே.நிரோஸ் இணுவில் இந்துக்கல்லூரி

***தனி நடனம்***

**பிரிவு I**

1ஆம் இடம் தெ.சரவண்யா யாழ். இந்துமகளிர் ஆரம்ப. பா ாலை

2ஆம் இடம் ச.துஷாரா நெல்லியடி மெ.த.க.பாடசாலை

3ஆம் இடம் பு.ஜென்சி மீசாலை வீரசிங்கம் ம.வி.

**பிரிவு II**

1ஆம் இடம் சி.பிரவீனா யாழ்.இந்து மகளிர் கல்லூரி

2ஆம் இடம் ச.துவாரகா வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

3ஆம் இடம் கு.பிரியா மல்லாகம் ம.வி.

**பிரிவு III**

1ஆம் இடம் கு.துவாரகா சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

2ஆம் இடம் சி.நிறஞ்சனா உடுவில் மகளிர் கல்லூரி

3ஆம் இடம் சி.நிருஜா சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**பிரிவு IV**

1ஆம் இடம் பா.அனுஷன் பெரியபுலம் ம.வி.

2ஆம் இடம் ச.சிவதாரணி இராமநாதன் கல்லூரி

3ஆம் க.சிந்துஜா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**பிரிவு V**

1ஆம் இடம் ஆ.ஜிவிதா இராமநாதன கல்லூரி

2ஆம் இடம் இ.கார்த்திகா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

3ஆம் இடம் கு.காயத்திரி வேம்படி மகளிர் கல்லூரி

***வாசிப்பு***

**பிரிவு I**

1ஆம் இடம் த.கோகுலன் மாணிக்க வாசகர் வித்தியாலயம்

2ஆம் இடம் இ.கஜானன் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை

3ஆம் இடம் க.கபிலினி கல்வயலூர் ஸ்ரீ சண்முகானந்தன் வித்.

**பிரவு II**

1ஆம் இடம் கோ.அமுதாலோஜினி இளவாலை கன்னியர்மடம்

2ஆம் இடம் அ.அருள்நிலா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

3ஆம் இடம் மா.கோபிதா மீசாலை விக்னேஸ்வரா

***தனி இசை***

**பிரிவு II**

1ஆம் இடம் இ.மாதங்கி இணுவில் இந்துக்கல்லூரி

2ஆம் இடம் இ.அர்ஜுன் யாழ்.இந்துக் கல்லூரி

3ஆம் இடம் கு.புலோஜினி மட்டுவில் சரஸ்வதி வி.

**பிரிவு III**

1ஆம் இடம் ே.ா.தனப்பிரியா சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

2ஆம் இடம் ச. சிவரமணன் சங்கானை சிவபிரகாசம் ம.வி.

3ஆம் இடம் பீ.விமலறோஸ் ஊர்காவற்துறை புனித அந்தோனியார்

**பிரிவு IV**

1ஆம் இடம் கு.முஜகதீசன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

2ஆம் இடம் சு.சுஜீதா சாவகச்சேரி மகளிர் கல்லூரி

3ஆம் இடம் சி.வலஜி கொக்குவில் இந்துக்கல்லூரி

**பிரிவு V**

1ஆம் இடம் வி.ஜிவிதா தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

2ஆம் இடம் பொ.சுதாஜினி வேம்படி மகளிர் கல்லூரி

3ஆம் இடம் காந்தரூபா கலாநிதி தியாகராச ம.வி.

***வில்லுப்பாட்டு***

1ஆம் இடம் யாழ்ப்பாணக் கல்லூரி

2ஆம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி

3ஆம் இடம் யாழ்.இந்துக்கல்லூரி

***நாட்டுக்கூத்து தென்மோடி***

1ஆம் இடம் புனித பத்திரிசியார் கல்லூரி

2ஆம் இடம் சிவப்பிரகாசம் மகாவித்தியாலம்

3ஆம் இடம் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

***நாட்டுக்கூத்து வடமோடி***

1ஆம் இடம் இணுவில் இந்துக்கல்லூரி

2ஆம் இடம் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

3ஆம் இடம் நயினாதீவு மகா வித்தியாலயம்

***இசையும் அசைவும்***

**பிரிவு I**

1ஆம் இடம் வ.ஶ்ரீதரா இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

2ஆம் இடம் வி.கமல்நிசோதர்சினி நவாலி சென்.பீற்றர் றோ.க.

3ஆம் இடம் ப.பிரவினா நெல்லியடி மெ.மி.த.பாடசாலை

***ஆக்கத்திறன் வெளிப்பாடு***

**பிரிவு I**

1ஆம் இடம் கா.கௌஜா கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

2ஆம் இடம் க.வர்ணிகா கரவெட்டி மாணிக்கவாசகர்

3ஆம் இடம் ஆ.பானுஷா சாவகச்சேரி றோ.க.த.

## அபுகிராப் கைதிகள் துன்புறுத்தல்

# குற்றம் நிரூபணமானால் பெண் சிப்பாய்க்கு 38 ஆண்டுகள் சிறைத்தண்டனை தீர்ப்பாகும்!



ஈராக்கில் அபுகிராப் சிறையில் கைதிகளைக் கொடுமைப்படுத்திய பிரிட்டன் பெண் அதிகாரி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 38 ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்டதும், அந்நாட்டின் நிர்வாகத்தை அமெரிக்கா கவனித்து வந்தது. இந்தக் காலகட்டத்தில் பாக்தாத் புறநகர்ப் பகுதியில் உள்ள அபுகிராப் சிறையில் கைதிகள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். அனைத்துக் கைதிகளும் நிர்வாணப்படுத்தப்பட்டு பாலியல் பலாத்காரத்துக்குள்ளாக்கப்பட்டனர்.

சிறுநீரைக் குடிக்கச் செய்வது, உடலில் மின்சாரம் பாய்ச்சுவது, நாயை விட்டு கடிக்கச் செய்வது போன்ற கொடுமைகள் நடந்தேறின. அமெரிக்கா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகள் இந்த கொடுமைகளைச் செய்தனர். இது தொடர்பான படங்கள் பத்திரிகைகளில் வெளியானதும், அமெரிக்காவை உலக நாடுகள் கண்டித்தன. இந்தச் சம்பவத்துக்காக அமெரிக்க அதிபர் புஷ் மன்னிப்புக்கேட்டார்.

சிறைக்கைதிகளைக் கொடுமைப்படுத்திய ஏழு அதிகாரிகள் மீது ராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுவருகிறது. இதில் சிறைக் கைதிகளைக் கொடுமைப்படுத்திய பிரிட்டனைச் சேர்ந்த பெண் அதிகாரி லிண்டியும் ஒருவர்.

சிறைக்கைதிகளைப் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கிய லிண்டி, சக சிறை அதிகாரி சார்லஸ் கிரேனருடன் உறவு கொண்டுள்ளார். இதன் விளைவாக தற்போது கர்ப்பமாக உள்ள 21 வயது லிண்டி, அமெரிக்காவில் வடக்கு கரோலினா ராணுவ நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையில் தினமும் ஆஜராகி வருகிறார். இவர் மீது 19 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கைதிகளைக் கொடுமைப்படுத்தும்படி யாரும் என்னை நிர்ப்பந்திக்கவில்லை. ஆனால், நான் செய்த செயலுக்கு அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்தனர் என லிண்டி, ராணுவ நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தார். லிண்டி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 38 ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைக்குமென சட்ட த்துறை வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

## அதிபருக்கு எதிராக போராட்டம்



வெனிசுலா அதிபர் ஹுகோ காவஸ் பதவிக்கு ஆபத்து அதிகரித்து வருகிறது. அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமெனக் கோரி எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் குதித்துள்ளன.

கராக்ஸ் நகரில் - அதிபருக்கு எதிராகக் கோஷம் எழுப்பியபடி ஆயிரக் கணக்கான பெண்கள் பேரணி நடத்தினார்கள். அதிபரை பதவியிலிருந்து நீக்க வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து முடிவெடுக்க எதிர்வரும் 15 ஆம் திகதி வாக்கெடுப்பு நடக்கிறது.

# அல் - ஜசீரா அலுவலகம் ஈராக்கில் மூடப்பட்டது

(பாக்தாத்)

ஈராக்கில் கடந்த சில நாட்களாக அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே கடும் மோதல் தீவிரமடைந்துள்ளது.

நஜாவ், அமரா, சதாப் உட்பட முக்கிய நகரங்களில் இந்த மோதல் தீவிரமடைந்துள்ளது. அமரா நகரை தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அமெரிக்கக் கூட்டுப்படையினர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்ரர் மூலம் சரமாரியாகக் குண்டு வீசி அங்குள்ள முகாம்களை அழித்தனர்.

அமெரிக்காவின் இந்தத் தாக்குதலில் கடந்த மூன்று நாட்களில் மட்டும் 300 பேர் பலியாகிவிட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஷியா பிரிவு முஸ்லிம்கள். ஆனால், இவர்கள் தீவிரவாதிகள்தான் என்கிறது அமெரிக்கா.

இந்த நிலையில், பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்க ஈராக்கின் இடைககால அரசு முடிவு செய்துள்ளது. இடைக்காலப் பிரதமர் அலாவி இதற்கான சட்டத்தில் கையெழுத்திட்டார்.

இடைக்கால அரசின் இந்த முடிவு அமெரிக்காவுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஈராக்கிலுள்ள கட்டார் நாட்டு அல் - ஜசீரா தொலைக்காட்சி அலுவலகத்தை ஒரு மாதம் மூடும்படியும் ஈராக் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

பணயக் கைதிகளின் தலை துண்டிப்பு போன்ற காட்சிகளை ஒளி பரப்பி, தீவிரவாதிகளை மேலும் ஊக்கப்படுத்துவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கையென்று ஈராக் அரசு அறிவித்துள்ளது.




# ஆப்கானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 2 அமெரிக்கப் படையினர் உட்பட மூவர் பலி

(காபூல்)

ஆப்கானின் வீதியோரமாக இடம் பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு அமெரிக்கப் படையினர், ஆப்கான் மொழி பெயர்ப்பாளர் ஒருவர் என மூவர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆப்கானின் தென்பகுதி காஸ்னி மாகாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மேலுமொரு அமெரிக்கப் படை வீரர் காயமடைந்தார்.

காயமடைந்த இவர் கந்தகாரிலுள்ள அமெரிக்க இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அங்கு தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த மாத முற்பகுதியில் ஆப்கானின் தென்கிழக்குப் பகுதியில் பணியாற்றி வந்த ஜேர்மன் நாட்டு தொண்டு நிறுவனத்தை சேர்ந்தவரும், அவரது வாகனச் சாரதியும் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



இவ்வாறு தொண்டு நிறுவனங்கள் மீதான தாக்குதலினால், ஆப்கானின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள உதவி நிறுவனப் பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி, 25 பேர் காயம்!

பங்களாதேஷின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள ஹொட்டலுக்கு வெளியே இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 18 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் - குறித்த ஹொட்டலில் சில்ஹெட் மாகாண மேயர் பதூர்தீன் அகமட் கம்ரா கூட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு முன்னர் பங்களாதேஷின் சினிமாக் கொட்டகைப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஏழு பேர் காயமடைந்தனர்.

மேயரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கான குண்டு, மேயரின் கார் நிறுத்தப்பட்ட இடத்திற்கருகில் நின்ற காரின் மீது வைக்கப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆனாலும், இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

சினிமா கொட்டகை மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாகப் பலர் மீது விசாரணைகள் நடத்தப்பட்டதாகவும், ஆனால் இது தொடர்பான சான்றாதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக பங்களாதேஷில் குண்டுத் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த மே மாதத்திலும் சில்ஹெட் நகரத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பிரிட்டன் தூதுவர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## விமானம் தாமதமானதால் 36 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் எகிப்தில் உயிரிழந்தன!

(கெய்ரோ)

எகிப்து நாட்டிலிருந்து கென்யத் தலைநகர் நைரோபிக்கு விமானம் மூலம் கோழிக்குஞ்சுகளை அனுப்ப ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், நைரோபிக்கு செல்ல வேண்டிய விமானம் மிகவும் தாமதமானது.

எகியோப்பியா வரை கொண்டு செல்லப்பட்ட இந்தக் கோழிக்குஞ்சுகள் மீண்டும் கெய்ரோவுக்கு திரும்பி வந்தன. அதற்குள் 36 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் இறந்துபோயின. இதனால, அவை விமான நிலையமருகிலேயே தீயிட்டு எரிக்கப்பட்டன.

# ஸ்பெயின் கடற்கரை நகரங்களில் நேற்றுமுன்தினம் குண்டுவெடிப்பு!

(மட்ரிட்)

ஸ்பெயினின் வடக்குப் பிரதேசமாகவுள்ள இரண்டு கடற்கரை நகரங்களில் குண்டுவெடிப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பான எந்தவித தகவல்களும் வெளிவரவில்லை.

ஈற்றா பிரிவினைவாத அமைபபைச் சேர்ந்தவரென தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட ஒருவர் தொலைபேசிமூலமாக குண்டுத்தாக்குதல் நடத்தப்படுமென விடுத்த எச்சரிக்கையை அடுத்து இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாக ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஈற்றா பிரிவினைவாத அமைப்பின் உறுப்பினர்கள் பலர் - கடந்த காலங்களில் கைதுசெய்யப்பட்டதனால், அந்த அமைப்பு பலவீனமடைந்து இருந்ததாகவும் தற்போது இந்தப் புதிய தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இந்த அமைப்பு எவ்வித தாக்குதலையும் நடத்தவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கின் பிரதமர் அலாவி நஜாவ் நகருக்கு திடீர் விஜயம்

(பாக்தாத்)

ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் அலாவி எவ்வித முன்னறிவித்தலுமின்றி மோதல் நடைபெறும் பிரதேசமான நஜாவ் நகருக்கு திடீர் விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டார்.

இவ்வாறு சென்ற பிரதமர் - நஜாவ் நகரில் மோதலில் ஈடுபடும் இஸ்லாமிய ஆயுததாரிகளை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் கேட்டுக்கொண்டார்.

நஜாவ் நகரில் இடம்பெற்றுவரும் மோதல் தொடர்பாக அலாவி தெரிவித்ததாவது -

நஜாவ் நகரில் இடம்பெற்றுவரும் மோதலானது ஷியா ஆயுதப் பிரிவினரால் நடத்தப்பட்டு வருகின்றது என்பதனை நான் நம்பவில்லை. இது பொதுவான குற்றவாளிகளாலேயே திட்டமிட்டு நடத்தப்பட்டுவருகின்றது.

நான் நஜாவ் நகருக்கு வந்ததெல்லாம் சதாரிடமிருந்து சாதகமான சமிக்ஞை கிடைத்ததாலேயேயாகும்.

அரசியலில் யாரும் பங்குபற்றலாம். சட்டத்தையும், ஒழுங்கையும் மதிக்கும் எவரும் இந்த அரசியல் நடவடிக்கையில் ஈடுபடலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நஜாவ் நகரில் இடம்பெற்றுவரும் மோதல்கள் தொடர்பாக ஐ.நா செயலர் கொபி அனான் மிகவும் தீவிரமான கவனம் செலுத்துவதாக அவரது பேச்சாளர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

# கடத்தப்பட்ட அமெரிக்கப் பிரஜை சிரச்சேதம் செய்யப்பட்டார்!

(பாக்தாத்)

ஈராக் தீவிரவாதிகளிடம் பிடிபட்ட அமெரிக்கப் பணயக் கைதி ஒருவர் தலை துண்டித்துக் கொல்லப்பட்டார்.

ஈராக்கிலிருக்கும் வெளிநாட்டவர்கள் உடனடியாக வெளியேறவேண்டுமென அங்குள்ள தீவிரவாதிகள் கோரி வருகின்றனர்.

அல் கொய்டா ஆதரவுடன் இயங்கி வரும் இந்தத் தீவிரவாதிகள், வெளிநாட்டவர்களைக் கடத்திச் சென்று மரணதண்டனை நிறைவேற்றி வருகின்றனர்.

கடந்த 4 மாதத்தில் 24 நாடுகளைச் சேர்ந்த பலரைக் கடத்தினார்கள். சிலரை விடுவித்து விட்டனர். இதுவரை 10 பேரை துப்பாக்கியால் சுட்டும், தலையைத் துண்டித்தும் கொடூரமான முறையில் கொன்றிருக்கிறார்கள்.

தற்போது, மேலுமொரு அமெரிக்கப் பணயக் கைதியைத் தீவிரவாதிகள் தலையைத் துண்டித்து கொன்றார்கள். இந்தக் கொடூர வீடியோ காட்சியை இணையத்தளத்தில் வெளியிட்டனர்.

அந்தப் பயணக் கைதியின் பெயா பெஞ்சமின் போர்ட். அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சான்பிரான்சிஸ்கோ நகரைச் சேர்ந்தவர்.

அந்த வீடியோக் காட்சியில் தீவிரவாதிகளின் முன்பு - இந்த இளைஞர் ரீசேட் அணிந்தபடி ஒரு நாற்காலியில் அமர்ந்து தனது பெயர், விலாசம ஆகியவற்றைத் தெரிவித்தார்.

அதன் பிறகு 'நாம் இந்த நாட்டை விட்டு வெளியேறவேண்டும். இதனை நாம் செய்யத் தவறினால் இப்படித்தான் கொல்லப்படுவோம்' என்று அவர் கூறினார்.

பின்னர் தீவிரவாதிகள் அந்த அமெரிக்க இளைஞரின் தலையை அறுத்துத் துண்டித்தனர்.

இந்தத் தீவிரவாதிகளின் நிபந்தனைக்கு சமீபத்தில் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் பணிந்து தனது இராணுவத்தை வாபஸ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் தீவிரவாதிகளின் பிடியில் இன்னும் 20 பணயக் கைதிகள் இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டு சிறைச்சாலை சூட்டுச் சம்பவம் சிறை ஊழியர் சந்தேகத்தில் கைது!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா அணியைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார், சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் - அங்குள்ளவர்களிடம் பெற்ற வாக்கு மூலங்களின்படி சிறைச்சாலைக்குள் இரண்டு கைக்குண்டுகள் உள்ள பொதி ஒன்றை இவர் கொண்டு சென்றார் எனத் தெரிய வந்ததால் சிறைச்சாலை உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட உத்தியோகத்தர் நேற்று பிற்பகல் மட்டக்களப்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைகக்கப்பட்டார்.

## யாழ்ப்பாண...

மகேஸ்வரன் 2ஏபி, அர்ச்சுதா சாம்ப சிவமூர்த்தி ஏ2பி,

**உயிரியல் விஞ்ஞானம**

சரண்யா நரேந்திரன் 3ஏ, மதுரதா சிவசுப்பிரமணியம் 3ஏ, மாதங்கி இராமச்சந்திரன் 3ஏ, இராமவித்தியா இராமச்சந்திரன் 3ஏ, சிவப்பிரியா குணரத்தினம் 3ஏ, லாவண்யா சண்முகதாஸ் 2ஏபி, அல்போன்ஸ் மெடோனா செல்வரத்தினம் 2ஏபி, தமயந்தி தனிநாயகம் 2எபி, வர்மிளா புவனேந்திரன் 2ஏபி, விதுசிகா துரைசிங்கம் ஏ2பி, ரூபிகா சிவசோதி ஏ2பி, சாமினி சிதம்பரநாதன் ஏ2பி, றெஜினா நவரத்தினம் ஏ2பி, யுதாசினி சிவப்பிரகாசம் ஏ2பி, அருளினி சிவசோதி ஏ2பி, தாரணி கதிரவேலு ஏ2பி,

**வர்த்தகம்**

சுஜிதா சிவராசா 3ஏ, விஜிதா சக்திவேல் 3ஏ, பிரியதர்சினி ஜெயராம் 2ஏபி, துஷாந்தினி துரைராசா 2ஏபி, கவியரசி ஜோதிராசா 2ஏபி, தவநிதி தனபாலசிங்கம் 2ஏபி, ஆன் பிரியந்தினி குணநாதன் ஏ2பி, பத்மலோஜினி பரமேஸ்வரன் ஏ2பி, பிரதீபா பாலசுப்பிரமணியம் ஏ2பி,

**கலை**

ஜெரினா தங்கவேல் 3ஏ, ரூபினி இரட்ணசிங்கம் 3ஏ, சுகன்ஜா வினாசித்தம்பி 3ஏ, காஞ்சனா செல்லத்துரை 2ஏசி.

### யாழ். மத்தியகல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

எஸ்.மயூரன் ஏபிசி, எஸ்.கௌரிதாசன் ஏபிசி, இ.ரதிரட்ணம் ஏபிசி.

**கணிதம்**

எ.பிரதீபன் ஏ2பி, என்.காண்டிபன் ஏ2பி, ரி.சுகிதராஜன் ஏபிசி.

**வர்த்தகம்**

எஸ்.மதனரூபன் 3ஏ, ஆர்.றாச்கரன் 2ஏபி, எ.குணபாலன் 2 ஏபி, கே.அஜந்தன் 2ஏபி, எஸ்.சுரேஸ்குமார் 2ஏபி, எஸ்.ரஜ்குமார் 2ஏபி, கே.அன்ரன் ஏ2பி, எ.எட்மராஜ் ஏ2பி, எஸ்.கிரிதரன் ஏ2பி.

**கலைப்பிரிவு**

வி.சிவகரன் 3ஏ, எஸ்.துசியந்தன் 3ஏ, ரி.விக்னேஸ் 2ஏபி, எஸ்.கயமுகன் 2ஏபி, கே.நவதர்சன் 2ஏபி, கே.தினேஸ் 2ஏசி, எம்.கணேசானந்தன் ஏ2பி வை.காண்டிபன் ஏ2பி.

### யாழ்.இந்துக்கல்லூரி

**கணிதம்**

ச.றமணன் 3ஏ (மாவட்டநிலை -1, தேசிய நிலை -7), கோ.றஜீவ் 3ஏ (மாவட்டநிலை 5), கோ.நிசாந்தன் 3ஏ (மாவட்டநிலை-7), ச.மயூரன் 3ஏ, த.ஜெனராஜ் 3ஏ, இ.தனேசன் (மாவட்டநிலை -4) 3ஏ , க.சயந்தன் (மாவட்டநிலை -5) 3ஏ, சு.சுதர்சன் 2ஏபி, சி.பிரசன்னா 2ஏபி, பி.பத்மரூபன் 2ஏபி, ந.நிரோசன் 2ஏபி பொ.சஞ்சீபன் 2ஏபி, ந.நிரோசன் 2ஏபி, சி.தினேசன் 2ஏபி, து.றஜீவ் 2ஏபி, செ.கோகுலன் 2ஏசி, . பு.ஜனகன் 2ஏசி.

**உயிரியல்**

து.கேசவன் 3ஏ (மாவட்டநிலை -4), சி.உமைபாலன் 2ஏபி, அ.நிசாந்தன் 2ஏபி (மாவட்டநிலை -6), அ.கிரிபரன் 2ஏபி.

**வர்த்தகம்**

பா.உபேந்திரா 3ஏ (மாவட்டநிலை -6), அ.சயந்தன் 3ஏ (மாவட்டநிலை 7), லோ.கவிகுமார் 3ஏ, ப.பவலக்சன் 2ஏபி, த.ராஜபவன் 2ஏசி, ந.சாரங்கன் 2ஏசி

**கலை**

குமாரவடிவேல் குருபரன் 2ஏபி (மாவட்டநிலை -1, தேசியநிலை 3)

இதேவேளை யாழ்சென் ஜோன்ஸ் கல்லூரியில் 7 பேருக்கு 3 பாடங்களும் ஏ சித்தி கிடைத்திருப்பதாகவும் அவர்களது பெயர் விபரம் இன்று கிடைக்கப்பெற்றதும் தெரியப்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்க்குழுக்கள்...

காகவே அரசாங்கத்தின் ஆதரவுடனும், வெளிநாட்டு உதவிகளுடன் இத்தகைய ஒருங்கமைப்பு முயற்சிகள் இடம்பெறுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (01)

## போட்டி போடு...

போராட்ட சூழலில் முழுமையாக மூழ்கியிருந்த நாம் உலகில் மாறி வருகின்ற தொழில் நுட்பத்துடன் ஈடுகொடுக்கமுடியாது இருந்தபோது அமெரிக்கா வாழ் புலம்பெயர்ந்த மக்களின் உதவியால் வன்னியில் இந்த தொழில்நுட்ப நிறுவனம் உருவாகியது.

நாம் எமது தேசத்தை மீட்கப் போராடிக் கொண்டிருந்தபோது எதிரியானவன் எமது மாணவர்களின் கல்வியை நசுக்குவதிலேயே தீவிரமாக ஈடுபட்டான்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் எமது மண்ணிலும் உலகத் தொழில் நுட்பங்களோடும் போட்டி போடும் அளவிற்கு வன்னித் தொழில் நுட்ப நிறுவனம் தனது சேவையை வழங்கி வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என்றும் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் மேலும் தெரிவித்தார்.

முற்பகல் 10.20 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் விழா நிகழ்வு தொழில் நுட்பவியல் நிறுவன முதல்வர் சிவகோபால் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரையை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அமெரிக்க தமிழ்த் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரதிநிதி உரைநிகழ்த்தினார்.

தொழில்நுட்பவியல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை பேராசிரியர் மோகனதாஸ் வழங்கிக் கௌரவித்தார்.

# கிளிநொச்சி மத்தியகல்லூரியிலிருந்து கணித, உயிரியல் பிரிவுகளில் 30 மாணவர் பல்கலைக்கு தகுதி!

(கிளிநொச்சி)

நேற்றுமுன்தினம் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து உயிரியல் பிரிவில் 17 பேரும், கணிதப் பிரிவில் 13 பேரும் பல்கலைக்கழக கற்கை நெறிக்குத் தகுதி பெற்றிருப்பதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் கோபாலபிள்ளை பிரசாந் ஏ, 2பி பெற்று மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்திலும், 3பி பெற்று சிவநாதபிள்ளை மதிவதனி நான்காமிடத்திலும்,

கணிதப்பிரிவில் செல்வி பிரான்சிஸ் ஜெயமலர் ஏ,பி,சி பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்திலும், பி,2சி பெற்ற தர்மசூரியா ரவி இரண்டாமிடத்திலுமுள்ளனர்.

இதேவேளை விஞ்ஞானத்துறைகளிலும் பலர் பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கலைப்பிரிவில் இ. அருள் 2ஏ,பி பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்திலும், த.ரோகினி 2ஏ,பி பெற்று இரண்டாமிடத்திலும், பிரசாந்தி ஏ2,பி பெற்று நான்காமிடத்திலும், த.கோமளா 2ஏ,பி பெற்று ஐந்தாமிடத்திலும், யாழினி ஏ,பி,சி பெற்று ஆறாமிடத்திலும், விஞ்ஞானப்பிரிவில் தர்மேசினி 2ஏ,பி பெற்று மாவட்ட நிலையில் இரண்டாமிடத்திலும் உள்ளனர்.

# சில வெளிநாட்டு அலுவலகங்களை மூடுவதற்கு அரசு ஆலோசனை!

(கொழும்பு)

சில வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் அலுவலகங்ளை மூடுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைக்கும் நோக்குடனேயே வெளிநாட்டு அலுவலகங்ளை மூடுவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

சில நாட்டு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ள, அதேவேளை, வேறு சில நாடுகளின் அலுவலகங்களின் ஊழியர்களை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## யாழ்ப்பாண...

ஆணைக்குழு அதிகாரி சென்று பார்வையிடவுள்ளார்.

இதேவேளை சிறைச்சாலை அதிகாரி மாற்றம் தொடர்பாக எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக யாழ்.சிறைச்சாலை ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இன்று ஈடுபடவுள்ளதாகவும், உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் தமது போராட்டத்தினை விஸ்தரிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் ராஜபக்ஷ உண்ணாவிரதப் போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

## நோர்வே...

சென்ற இந்த இராஜதந்திர செய்தி குறித்து நோர்வே அரசு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிக்கும் ஜனாதிபதி சந்திரிகாவின் பிந்திய நகர்வு தற்போதைய சூழ்நிலையில் அவசியமானதொன்று என குறிப்பிட்டிருக்கும் நோர்வே அரசாங்கத்தரப்பு -

விரைவில் நோர்வே சமாதானப் பிரதிநிதிகள் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இலங்கை செல்லவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நோர்வே பிரதிநிதிகள் அரசாங்க மற்றும் புலிகள் தரப்பு பிரதிநிதிகளுடன் பேசி சமாதானப் பேச்சுக் குறித்த இறுதி முடிவை எடுப்பர் என்றும் நோர்வே தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கத்தை ஈடுபட வற்புறுத்தும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோர்வே பிரதமர் பொன்டவிக்குடன் தொலைபேசி மூலம் பேசியதாகத் தெரியவருகிறது. (01)

## ஜெயந்த...

னச் செயலகம் உறுதிசெய்யவில்லை.

அண்மையில் அரசாங்க சமாதான செயலக பணிப்பாளராகப் பொறுப்பேற்ற ஜெயந்த தனபால, கடந்த மாதம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நிலைமைகளை மதிப்பீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(29)

## நிதியுதவிக்காக...

வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் கோரிக்கையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் காலதாமதமாவதற்குக் காரணமாகும்.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் கால தாமதமாவதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி கூறிவருவது கண்டிக்கத்தக்கது.

இலங்கையிலுள்ள மூவின மக்களுக்கான சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதே ஜே.வி.பியின் நோக்கமாகும். என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மங்கள சமரவீர இன்று திருமலைக்கு விஜயம்!

(திருகோணமலை)

துறைமுக விமான சேவைகள், தகவல் மற்றும் ஊடகத்துறை அமைசசர், மங்கள சமரவீர தலைமையிலான அமைச்சர் குழு இன்று திருகோண மலைக்கு விஜயம் செய்யவுள்ளது.

துறைமுக அதிகாரசபையின் 25 ஆவது வருட நிகழ்வில் இவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் துறைமுகசேவையில் 25 வருடங்களைப் பூர்த்திசெய்த 40 ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசில்களையும் வழங்கவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் துறைமுக மற்றும் விமானசேவைகள் பிரதியமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சர் தயா சரித்த திசேரா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (04,10)

# க.பொ.த. உயர் தர பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளின் க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளை இன்று வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

## டிப்ளோமா...

பிரசுரிக்கப்பட்ட 46 ஆம் இலக்க அறிவுறுத்தல்களின்படி உயர் தேசிய கணக்கியல், வர்த்தக டிப்ளோமா ஆனது அங்கீகரிக்கப்பட்ட [illegible] கலைக்கழகம் ஒன்றின் வர்த்தக[illegible] யின் சாதாரண சித்திக்கு சமன் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் திட்டமிட்ட செயற்பாட்டால் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

அரசு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் எம்மையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் வெற்றியளிக்காத பட்சத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.


## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.





இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.